2022

# වාර්ෂික කාර්යය සාධන වාර්තාව හා ගිණුම්
# வருடாந்த செயலாற்று அறிக்கை மற்றும்
# கணக்கறிக்கை
# Annual Performance Reports & Accounts



අම්පාර,වඩිනාගල ජයන්ති වැව









Designed : IT Unit ,Distsec Ampara | Photographed : District Media Unit

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර්.
மாவட்ட செயலகம் - அம்பாறை.
District Secretariat - Ampara .

## அரசாங்க அதிபரின் செய்தி



2022 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் ஆற்றப்பட்ட சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை மையமாகக் கொண்டு, வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் முன்வைக்கிறேன். 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும், பிரதேச செயலகங்களில் நிதிக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கின் குடியேற்றத்தின் கீழான திகாமடுல்ல குடியேற்றத்திற்கு உரித்தான தற்போதைய அம்பாறை மாவட்டம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. விவசாயத் துறையின் தேசிய உற்பத்தியில் பெரும் பங்கினை வகிக்கின்ற அம்பாறை மாவட்டம் வெற்றிகரமாக நன்னீர் மற்றும் உவர்நீர் கைத்தொழிலும் நாட்டின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் பங்களிப்புச் செய்கிறது. பல்கலைக்கழகமொன்று, உயர் தொழிநுட்ப நிறுவனம், கல்வியற் கல்லூரியொன்று, தொழிநுட்பப் பாடசாலை, தொழில் பயிற்சி நிறுவனத்தைப் போன்றே தேசிய பாடசாலை உட்பட முன்னேற்றும் தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் பாடசாலை முறைமையினால் கல்வித் துறையில் உயர்ந்து தரமானதான விருத்தியை அம்பாறை மாவட்டம் அடைந்துள்ளது.

சுற்றாடல் ரீதியில் கவர்ச்சிகரமான கல்லோயா தேசிய பூங்கா, அருகம்பே ஸர்பின் கரையோரம் அத்துடன் கலாசார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ரஜகல, மகுல்மகா விகாரை, புத்தங்கல, உகந்தை கோயில், கடற்கரைப் பள்ளிவாசல் போன்றவற்றைக் கொண்டுள்ளதன் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக மாறியுள்ளது.

செலுமைமிக்கதோர் சமூதாயத்தைக் கொண்ட வளம் மிக்கதோர் மாவட்டமொன்றாக கட்டியெழுப்பப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்திற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற தேசிய வேலைத்திட்டம், பசுமை விவசாய கைத்தொழில், புதுமையடைந்த நிலையான விவசாயத்தினால் பாதுகாப்பான உணவினை நாட்டிற்கு பங்களிப்பு செய்யும் நோக்குடன் இச் செயற்திட்டம் மாவட்டத்தின் நாளைய தினத்திற்கான இடம் பெறுகின்ற பெரும் முதலீடு ஒன்றாக உள்ளது.

விவசாய பொருளாதாரத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ள திகாமடுல்ல விவசாய மக்களின் பொருளாதார ரீதியாக வலுவூட்டி காணப்படுகின்ற விவசாய முறைமைக்கான பசுமை விவசாய முறைமை ஒன்றாக முகாமைத்துவம் செய்து, உகந்த தொழிநுட்பத்துடன் உச்ச வினைத்திறனை பயன்படுத்தி உயர்ந்த உற்பத்தி திறனை பெற்றுக் கொண்டு, திகாமடுல்ல உணவுப்பாதுகாப்பினை உறுதி செய்து தேசிய பொருளாதாரத்தின் முன்னனி உணவு உற்பத்தியாளராகவும், வெளிநாட்டுச் சந்தையில் விவசாய உற்பத்தியின் ஊடாக வெற்றி அடைந்து விவசாய மக்களின் வாழ்க்கைக்கான நிலையினை உயர்த்துதல் எமது முக்கியமான நோக்கமாகும்.

இம் மக்களின் வாழ்க்கையை செலிமை மிக்கதாக்கி வளமிக்கதோர் நாளைய தினம் ஒன்றை உருவாக்கும் வகையில் குறித்த சுற்றறிக்கை, கட்டளைகள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்களுக்காக ஏற்கக்கூடியதாக இயலளவில் மக்களின் அபிவிருத்தியின் பொருட்டு, உயர்ந்த இயலளவினை ஈடுபடுத்தி மாகாணத்தின் அரசியல் விதிகளின் அறிவுரை மற்றும் வழிகாட்டலின் கீழ் அரச கொள்கைகளை வினைத்திறனாக செயற்படுத்தும் பாரிய பொறுப்பு எமக்கு சுமத்தப்பட்டுள்ளது. இதன் பொறுப்பினை ஆற்றும் போது செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி சர்வ மத தலைவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி அரச

அதிகாரிகளுக்கும் அதற்கு மேலதிமாக இப்பணியின் பொருட்டு நேரடியாகவோ, மறைமுகமாகவோ எம்முடன் தொடர்பட்ட அம்பாறை மாவட்டத்தின் ஏனைய அரச, நியாயாதிக்க சபை அரச சார்பற்ற அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பணித் தொகுதியின் சிவில் சமூக அமைப்புக்களின் கிராமிய குழு போன்றவற்றையும் இதயபூர்வமாக நினைவு கூறுகின்றது.

இதன் கடமை பொறுப்புக்களின், மேற்படி செயலாற்றுகையுடன் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதற்கு மிகவும் முன்னுரிமை பணி ஒன்றினை ஆற்றியவர்களாக இருப்பது பிரதேச செயலக முறமைக்கிடையே ஒன்றினைப்பு, மற்றும் முகாமைத்துவம் செய்து கடந்த வருடத்தில் எனது இலக்கினை பூர்த்தி செய்வதற்கு உயர்ந்த பங்களிப்பினை வழங்கும் மேலதிக மாவட்ட செயலாளர்கள், பிரதான கணக்காளர், பணிப்பாளர் திட்டமிடல், மற்றும் ஏனைய பணிப்பாளர்கள், மாவட்ட பொறியிலாளர் மற்றும் சகல பணித் தொகுதியாளருக்கும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் பிரதானமாக அவ்வலுவலகங்களில் பதவியுரு உத்தியோகத்தர்கள் உட்பட்ட முழுபணித் தொகுதியினருக்கும் எனது பாராட்டினை தெரிவிக்கின்றேன்.

அத்துடன், நிலவும் பொருளாதார நெருக்கடிகளுடன் எரிபொருள் பற்றாக்குறை பிரச்சினைக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பத்தில் நெல் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கும் மாவட்டமாக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி நடைமுறை வழிமுறைகளை தயாரித்து எதிர்பார்க்கப்படும் அறுவடையினை பெற்றுக்கொள்ள முடியுமானதுடன் தொழிற்சாலைகள், சுயதொழில், வியாபாரம், சுகாதாரம், போக்குவரத்து போன்ற அன்றாட மக்கள் வாழ்க்கையில் இடைஞ்சல் ஏற்படாத வகையில் மாவட்டத்தினை சுமூகமான முறையில் கொண்டு செய்வதற்கு இயலுமானது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன் அதற்காக நேரடியாக மற்றும் உள்ளார்ந்த வகையில் பங்களிப்பு செய்த சகல உத்தியோகத்தர்கள் உள்ளிட்டு பொதுமக்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜே.எம்.ஏ.டக்ளஸ்,
அரசாங்க அதிபர்/மாவாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்.

## Table of Contents


**01- நிறுவனத்தின் விபரம் நிறைவேற்றுப் பொழிப்பு** ..... 1

1.1. அறிமுகம் ..... 1

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் ..... 6

1.3. பிரதான செயற்பாடுகள் ..... 7

1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை ..... 8

1.5*மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்* ..... 9

1.6*அமைச்சு / திணைக்களம் /மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் நிதியங்கள்* ..... 10

1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள் ..... 10

**02 – முன்னேற்றம், சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்** ..... 11

**03.2022 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** ..... 15

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று ..... 15

3.2. நிதிநிலைமை பற்றிய கூற்று ..... 16

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று ..... 17

3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் ..... 18

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை ..... 29

3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றுகை ..... 30

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு ..... 31

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ..... 34

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ..... 35

**04. செயற்திறன் குறிகாட்டிகள்** ..... 51

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்) ..... 51

**05. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்** ..... 52

5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடவும் ..... 52

5.2 ***நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல்*** ..... 54

**06.** ***மனித வள விபரம்*** ..... 55

6.1 ***பதவியணி முகாமைத்துவம்*** ..... 55

6.2 ***பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக*** ..... 55

6.3 ***மனித வள அபிவிருத்தி*** ..... 56

**07–** ***இணக்கப்பாட்டு அறிக்கை*** ..... 57

# 01. அத்தியாயம்

## 01- நிறுவனத்தின் விபரம் நிறைவேற்றுப் பொழிப்பு

### 01.1. அறிமுகம்

பழைய திகாமடுல்ல மக்கள் குடியேற்றத்திற்கு உட்பட்டதான தற்போதைய அம்பாறை மாவட்டமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இப்பூமியானது இடத்துக்கிடம் மலை செறிந்துள்ள தரையாக உள்ளது. இத் தரையானது கடல் மட்டத்திலிருந்து பொதுவாக 200 அடி வரையிலும், மலை உச்சியிலிருந்து 1000 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இது உண்மையிலேயே சகல வளம்கள் நிறைந்த பூமிப் பிரதேசமாக உள்ளது. ஊவாவின் மலைத்தொடரின் மேலால் சூழ்ந்துள்ள இருள் நிறைந்த திரையுடன் ஆரம்பித்து கிழக்கின் கரையோரம் வரைக்கும் தொடர்ச்சியான வயல் நிலமாகும். இப் பிரதேசமானது மனதைக் கவரும் காட்சிகளை காட்டி மிளிர்ந்து கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் பெய்யும் மழை நீரானது நிறைந்து களப்புப் பிரதேசத்தை அழகுபடுத்துகின்றது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும்போது செடிகள் வேளாண்மையால் மூடப்பட்டு பசுமை நிறைந்த சமுத்திரத்தின் அழகை வெளி க்காட்டுகின்றது.

வேளாண்மை வளர்ந்து வரும்போது சிங்களவர், தமிழர், மற்றும் முஸ்லிம் விவசாயிகளின் பறன்கள் வயல் புறங்களில் இடத்துக்கு இடம் தோற்றம் பெறுகின்றது. வயல்களில் உள்ள வேளாண்மைகள் முற்றி வரும்போது தூரத்தில் உள்ள காடுகளில் இருந்து வரும் யானைகள், பன்றிகள், மயில்கள் போன்ற காட்டுப் பிராணிகளை காண முடியும். மீண்டும் அறுவடையை மேற்கொண்ட பின்னர் இப்பூமியானது ஆடுகள், எருமைகள், மாடுகள், போன்றவை கூட்டம் கூட்டமாக நிறைந்து அழகான காட்சியைக் கொடுக்கின்றது. உலர் காலமாகிய ஆவணி மாதம் ஆகும்போது சூரிய ஒளி முழுவதும் இப்பூமியில் பட்டால் எந்தவொரு பிராணிக்கும் புல் தரையில்லாத கடினமான நிலமாக வேகமான காற்று வீசி முழுப் பிரதேசமும் புழுதியால் சூழப்பட்ட பிரதேசமாக மாறிவிடும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் கீழ் நாட்டிலுள்ள அதிகாரிகளினால் நிர்வாக கடமைகள் மேற்கொள்ளப்படும் இப்பூமி பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டில் வேவ்கம்பத்துவ எனும் புதிய நிருவாக பிரிவு நிறுவப்பட்டது. வாத்தாவ என்பவர் அப்பிரிவின் முதலாவது தலைவராக இருந் ததுடன் புராதன நீர்ப்பாசன வேலைகள் மீண்டும் புனர்நிர்மானம் செய்யும் வேலைகள் அக்காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தியினை உறுதிப்படுத்தி டி.எஸ்.சேனநாயக்கா என்பவர் கல்ஒயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். இவ் விவசாய குடியேற்றத் திட்டத்தின் சிறந்த படைப்பு அம்பாறை மாவட்டமாகும். வேவ்கம்பத்துவ, பின்தன்பத்துவ, பாணம்பத்துவ, சம்மாந்துறைப்பத்துவ, நிந்தவூர்பத்துவ, அக்கரைப்பற்று உள்ளடங்கலாக பழைய நிர்வாக அலகுகளை ஒன்றுசேர்த்து 1961ம் ஆண்டில் அம்பாறை என்ற பெயரில் தனியொரு நிருவாக மாவட்டமாக நிறுவப்பட்டது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி திரு.ஜே.டி.எஸ்.டி.லியனகே என்பவர் இதன் முதலாவது அரசாங்க அதிபராக நிருவாகப் பணிகளை ஆரம்பித்தார் 1980ம் ஆண்டில் மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி சி வலயமான தெஹியத்தகண்டி பிரதேசம் இம் மாவட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

தற்போதைய அம்பாறை மாவட்டமானது சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளையும், 20 பிரதேச செயலக பிரிவுகளையும், 503 கிராம உத்தியோகத்தர்

பிரிவுகளையும் மற்றும் 614 கிராமங்களையும் உள்ளடங்கியதாக உள்ளது. அதில் **2** மாநகரசபையும் 1 நகரசபையும் 17 பிரதேச சபையும் 14 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. 115 கி.மீ தூரத்தினைக் கொண்ட அழகு மிக்க கடற்கரையும் இடத்துக்கிடம் அமைந்துள்ள. மலைக்குன்றுகளும் ஊருக்கு ஊர் அமைந்துள்ளன. ஆறுகள், குளங்கள் ஊடாக வரும் நீரினால் செழிப்புற்று வளரும் வயல்வெளி நிலங்கள் வனவிலங்குகள் சுதந்திரமாக நடமாடக்கூடிய காடுகளும் இவ் மாவட்டத்தின் அழகினையும் பெறுமதியினையும் மேலோங்கச் செய்கின்றது. இம் மாவட்டத்தின் பல்லினமத, பல்லின கலாச்சாரத்தினை வெளிக்கொணரும் 202 விகாரைகளும் 185 இந்து ஆலையங்களும், 332 முஸ்லிம் பள்ளிவாசல்களும், 60 கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.

சனத்தொகை புள்ளி விபர தகவல்களுக்கு ஏற்ப (2019 மாவட்ட புள்ளிவிபரவியல் அலுவலகம்) கடந்த வருடத்தில் அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகையானது 728,086 ஆகும் குடும்பங்களின் எண்ணிக்கை 205,211 ஆகும். இந்த முழுச் சனத்தொகையில் 41.49% முஸ்லிம்களும், 35.32% சிங்களவர்களும், 22.58% தமிழ் மக்களும் ஏனைய இனத்தவர் 0.6% ம் வாழ்வதுடன், இங்கு சகல இனத்தவர்களும் ஒற்றுமையுடனும், சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டமானது 4,415 சதுரகிலோ மீற்றர் அளவினை கொண்டுள்ளதுடன். இம் மாவட்டத்தின் பயிர் நிலங்களின் அளவு 1,264.47 சதுரகிலோ மீற்றர் ஆகும். நீர்நிலைகள் 328.03 சதுரகிலோ மீற்றரும் வனாந்தரங்களின் (Forest & Range Land) 2,097.53 சதுரகிலோ மீற்றராகவும் உள்ளன. இம் மாவட்டத்தின் வருடாந்த மழை வீழ்ச்சியாக 1,886 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதுடன் பொதுவான வெப்பநிலை 29.81 செல்சியஸ் மட்டத்தில் உள்ளது.

நாட்டின் மிகப்பெரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரத்தை அண்டிய நீர்ப்பாசன திட்டத்தினூடாக வளம் பெறுகின்ற நெற்செய்கையில் 22.5% நாட்டின் விவசாயத்துறையில் "ஜாத்தியே வீ பிஸ்ஸ எனும் பெயரினை ஈட்டிக் கொடுத்ததும் அம்பாறை மாவட்டமாகும். உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகளினூடாகவும் தேசிய உணவு உற்பத்தியில் முன்னுரிமையை இம்மாவட்டம் பெற்றுக் கொடுத்துள்ளது. பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், கல்வியற் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிறுவனம் மட்டுமல்லாது தேசிய பாடசாலைகள் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த பாடசாலை கல்வி நிலையங்கள் ஒன்றிணைந்து கல்வித்துறையின் மிகவும் உயர்ந்த தரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அம்பாறை மாவட்டத்திற்கு இயலுமாய் உள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உற்பத்திதிறன் விருத்தியை பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார சேவைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது மிகவும் சிறந்ததொரு பாக்கியம் என்றே கூற வேண்டும். சுற்றாடல் ரீதியான கவர்ச்சி மிக்க கல்ஒயா தேசிய பூங்கா, குமண தேசிய பறவைப்பூங்கா, லாகுகல தேசிய பூங்கா அறுகம்பை சர்பின் கரையோரம் மட்டுமல்லாது கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள ரஜகல, தீகவாபிய, மகுள்மஹா விகாரை, புத்தங்கல, உகந்தை ஆலயம் கடற்கரைப் பள்ளி ஆகியவற்றை உள்ளிட்ட முக்கிய இடங்கள் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் உறைவிடங்களாகவும் மாறியுள்ளது.

## மாவட்டத்தின் சரித்திரப் பின்னனி

புராதன இலங்கையானது உருகுணை, மாயா, இராஜரட்டை எனும் மூன்று இராட்சியங்களாக இருந்துள்ளது. உருகுணை இராஜதானியின் மிக முக்கிய செல்வந்தமாக கருதப்பட்ட தீகவாபி அல்லது திகாமடுல்ல இராஜதானியின் வரலாறு புத்தர் காலம் வரைக்கும் செல்வதாக சரித்திரச் சான்றுகளின் மூலம்

உறுதிப்படுத்தப்படுகின்றது. வம்சாவழிக் கதைகளின் பிரகாரம் புத்தபெருமான் பரிநிர்வானமடைதலை காட்டுதல் இடம்பெற்ற பொழுது தான் விஜயன் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகின்றது. மனிக் அக்கித்த நாகர் அரசரின் அழைப்பில் புத்தபெருமான் மூன்றாவது முறையாக இலங்கைத்தீவிற்கு எழுந்தருளப்பட்ட மங்கள பயணத்தின் போதே தீகவாபியில் எழுந்தருளியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த பண்டுகஸ்தேவ மன்னனது காலத்திலே ஆரியர் குடியிருப்பொன்றாக அம்பாறை பிரதேசம் தோற்றமாகியுள்ளது. பண்டுகஸ்தேவ மன்னனது இராணியான கத்தியாயனா குமாரியின் சகோதரனான தியாகு குமாரனால் தோற்றுவிக்கப்பட்ட தியாயுகாமம் பின்னர் தீகவாபி மற்றும் திகாமடுல்ல ஆகிய பெயர்களில் அழைக்கப்படுவதாக வம்சாவழிக் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

தீகாமினியின் புத்திரரான பண்டுகாவய குமாரனால் அனுராதபுரம் தனது ஆட்சிக்குட்படுத்தப்பட்டு அனுராதபுரத்திலே தலைநகரமும் அமைக்கப்பட்டது. அதிலிருந்து அனுராதபுர பேரரசின் கீழான ஒரு நிருவாகப் பிரதேசமாக திகாமடுல்ல ஆட்சி செய்யப்பட்டதுடன் இது பிரதான தானியக் களஞ்சியமாகவும் விளங்கியது. பொலநறுவை இராஜதானி வீழ்ச்சியடைந்து ஆட்சியதிகாரம் தென்மேல் பிரதேசத்திற்கு தள்ளப்பட்டதுடன் அம்பாறை பிரதேசம் வனமாக தோற்றமாகியது.

மகாசேன மன்னனது பாரிய நீர்ப்பாசன தொழில்துறைத் திட்டம் கிழக்கில் வித்தன்னை பிரதேசத்திலிருந்து தமனகடுவ மற்றும் சேருநுவர ஊடாக கண்டி வரையும் விரிவடைந்திருந்தது. சுய அபிவிருத்தி நடவடிக்கையின் போது உருகுணையை மறக்க முடியாதுள்ளது. நீண்டகாலமாக அபிவிருத்தியடைந்துள்ள நீர்ப்பாசன தொழில்துறை தொடர்பான சிதைவுச் சின்னங்களை அம்பாறை மாவட்டதினுள் சுற்றி வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணமுடிகிறது. இலங்கையின் வரலாற்று கல்வெட்டுக்கள் பேணப்படுவதற்கு முன்னர் கல்ஓயா மிட்டியாவத்தை வேடுவ மக்களது உணவு நிலமாக இருந்ததாக பேராசிரியர் ஆர்.எல்.வுறோக்கியரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஆதி ஆரியரினால் நிறுவப்பட்டுள்ள கி.மு. **03**ம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுக்களில் காணக்கூடியதாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் வரலாறு தொடர்பாக பேசப்படுகின்ற ரஜகல பிரதேசம் பெறுமதிமிக்க சரித்திர ரீதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள ஓர் பிரதேசமாகும். இங்கு காணப்படுகின்ற தாதுகர்ப்ப சிதைவுச்சின்னங்களின் இத்தீவின் வளர்ச்சிக்காக வந்துள்ளது. இட்டித்திய மற்றும் மஹிந்த தேரரர்களின் தாதுகர்ப்பம் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது மஹிந்த தேரரின் இலங்கைப்பயணம் மற்றும் அவருடன் வந்த இட்டத்திய தேரர் பற்றியும் மஹாவம்ச செய்தி உறுதிப்படுத்துகின்றது. மஹிந்த தேரர் பரிநிர்வான மடைந்த பின்னர் தந்ததாதுக்கள் புதையலாக வைக்கப்பட்டு நாடுமுழுவதிலும் தாதுகர்ப்பங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றது.

இதனிடையில் ரஜகலயில் கிடைத்துள்ள மற்றுமோர் கடிதத்தில் துட்டகைமுனு மன்னனின் இராணி எனக்கூறப்பட்ட ரபிதா என்னும் பெண்ணைப் பற்றியும்

குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரித்திர ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகும். அத்துடன் நந்தமித்திரி இராட்சனி மற்றும் துட்டகைமுனு மன்னன் ஆகிய இரண்டு குடும்பங்களுக்குமிடையே விவாக சம்பந்தம் இருந்ததாக சான்று வழங்குகின்ற கல்வெட்டு ரஜகலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டையும் அம்பாறை மாவட்டத்தின் ஒழுனுகல கல்வெட்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றபோது துட்டகைமுனு மன்னனின் மகளும் நந்தமித்தரியின் மகனும் விவாகம் செய்து கொண்டதாகவும் சாட்சியமளிக்கின்றது.

தச நூற்றாண்டின் கொண்ட வெட்டுவான் கல்வெட்டை மிக விசேட முக்கியத்துவம் மிக்க சரித்திர ரீதியான மூலாதாரமாக கல்விமான்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அக் கல்வெட்டின் பிரகாரம் அனுராதபுர யுகத்தின் இறுதி அரைவாசி காலகட்டத்தின் போது சச்சிரிய சிங்க அம்பாறையில் வாழ்ந்ததாக தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அதில் கூறிய கிராமம் தன்னிறைவுக் கிராமம் என்றும் விற்பனைக்காக வெளியிலிருந்து பொருட்கள் கொண்டு வர வேண்டியதில்லை என்று பெயரிடப்பட்டுள்ள கற்களையும் கொண்டுள்ளது. அது போலவே இப்பிரதேசம் அனுராதபுர இராஜதானிக்குட்பட்டு ஆட்சி செய்யப்பட்டதற்குமான தகவல்களும் அந்தக்கல்வெட்டிலே சொல்லப்படுகின்றது.

பொலநறுவை யுகத்தின் போது அம்பாறையை முக்கிய இடமாக உரித்தாக்கிக் கொண்டதற்கான சாட்சியங்கள் வரலாற்று ரீதியாக கிடைத்துள்ளது. சோலி ஆதிபத்தியத்திலிருந்து நாட்டைமீட்டெடுத்து நாட்டினை ஐக்கியப்படுத்துவதற்காக மகா விஜயபாகு மன்னனால் (1065-1110) எடுத்துச் சென்ற விடுதலை வியாபாரத்திற்கும் திகாமடுல்ல உதவியளித்துள்ளது. என்பதற்கான தகவல்களும் உள்ளன. திகாமடுல்லையிலே அவரினால் செய்யப்பட்ட போர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுகனா ரபினாவின் ஆதிபத்தியத்திற்கும் திகாமடுல்ல உட்பட்டிருந்ததாக தகவல்களும் கிடைத்துள்ளது மகாபராக்கிரபாகு மன்னன் (1133-1180) தந்ததாதுக்களை பெற்றுக்கொள்ள சுகனா ரபியாவுடன் யுத்தம் செய்ததும் தீகவாபியிலேயே என்று இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றின் ஓர் காலத்தில் தலதா தேரர்களின் உரித்தும் கூட தீகவாபிக்கே உரித்தாகி இருந்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

கீர்த்திசிறிராச சிங்கன் அரசன் 1756 வருடங்களில் தீகவாபிக்கு வந்து தீகவாபி தாதுகர்ப்பத்தை புணரமைப்புச் செய்து அவ்விகாராதிபதி வந்திகொட நிக்றோத நாயக்க தேரருக்கு பூசையும் செய்துள்ளதாக தீகவாபி அரும்பத விளக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி வம்சாவழி செய்திகளினாலும் உறுதிப்படுத்தப்படுவதுடன் தீகவாபி தாதுகர்பத்தின் மேற்கு வாசலிலே அண்மைக்காலம் வரையும் தெரிந்து கொள்ளக்கூடியதாக காணப்பட்ட அழகொழிந்து போயுள்ள சித்திரக் குறிப்புக்கள் கண்டி யுகத்திற்குரிய சித்திர சம்பிரதாயத்திற்கு உரித்தானதெனவும் தெரியவந்துள்ளது. 1818க்கு பின்னர் அம்பாறை பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வொன்றாக சுட்டிக்காட்ட முடிவது நீர்ப்பாசன தொழிற்துறையின் அபிவிருத்தியின் போது பிரித்தானியர்கள் காட்டியுள்ள பங்களிப்பாகும் விசேடமாக 1853ல் சேர் ஹென்றி

றொட் ஆளுணர் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்து இந்த பிரதேசத்தின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்காக பணம் வழங்கி வைத்ததன் முக்கியத்துவம் தொடர்பாக விளங்கிக்கொண்டு அக்கால பிரித்தானிய அரசும் நீர்ப்பாசன தொழில்துறையை புணரமைப்பதற்காக பணம் வழங்கி முதலீடு செய்வதற்கான காரணமாக அமைந்திருந்தது.

இதன் கீழேயே அம்பாறை மாவட்டத்திற்குரித்தான திவுலானை சடயந்தலாவை மற்றும் சாகாமம் போன்ற நீர்த்தேக்கங்கள் புணரமைப்பு செய்தலும் 1880 தசாப்தத்தின் போது பட்டிப்பளை ஆற்றுத்திட்டம் ஆரம்பிப்பும் விசேடமாக நிகழ்ந்துள்ளது. பட்டிப்பளை ஆற்றுத்திட்டத்தின் கீழ் அம்பாறைக்குளம் கொண்டவெட்டுவான் குளம் போன்ற நீர்நிலைகளும் கல்ஓயா கங்கை நடுவே அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டும் 40000 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்கலுடன் பாரிய வயல் வெளியாகவும் இலங்கைத் தீவில் அம்பாறை மாவட்டத்திலே காணப்படுகின்றது.

இதன்பின்னர் 1930ம் தசாப்தத்தின் போது கல்ஓய நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பாக அடிப்படையான நோக்கங்கள் திரு. ஹேன்றி நீர்ப்பாசன பணிப்பாளரினால் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் மீண்டும் ஒருமுறையாக கிழக்கிலே அம்பாறை அபிவிருத்தியின் மத்திய நிலையமாக ஆக்கப்பட்டது. விசேடமாக நீர்ப்பாசன தொழிற்துறை வரலாற்றில் புதிய நிலைப்பாட்டினை ஆரம்பித்து உயர்நிலத்தைச் சார்ந்ததாக ஆழமான நீர்தேக்கங்கள் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு தேவையான நீரை வழங்கும் வழிமுறைகளை திட்டமிடுதல் கல்ஓய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழேதான் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பிரித்தானியர் ஆட்சியில் புதிய அத்திவாரத்தை அமைத்துக் கொள்வதற்காக உதவியளித்துள்ள கோல்புறூக்கமரன் திட்டத்திற்கமைய 05 மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டது. அதிலே அம்பாறை பிரதேசம் கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கியிருந்தது. கிழக்கு மாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையும் தமன்கடுவ, விந்தன்ன ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட மாகாணங்கள் மீண்டும் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. அதற்கமைய கிழக்கு மாகாணமானது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைக் கொண்டமைந்ததாகும். இதிலே மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளே திகாமடுல்லையும், விந்தனையும் அமைந்திருந்தது. 1837ல் விந்தனை பதுளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. 1961 ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டம் நிறுவப்படும் வரைக்கும் திகாமடுல்ல நிர்வாக பிரிவுகளுக்கு ஆளாக்கப்படவில்லை.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**நோக்கம்**

புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வள மிக்கதோர் மாவட்டம்

## பணிகள்

மாவட்டத்திலுள்ள வளங்கள் முழுவதையும் நல்லாட்சிப் பொறிமுறையின் ஊடாக முகாமைத்துவப்படுத்தி நிலையான அபிவிருத்தியினை முன்னெடுத்துக் கொண்டு சுதந்திரமானதும், பாதுகாப்பான மனம் கவர்ந்த சூழலில் அறிவு, திறமை, ஆக்கம் மற்றும் சுகதேக தன்மை நிறைந்த மிகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய வள மிக்க மாவட்டத்தினை கட்டியெழுப்புதல்

## பிரதி பலன்கள்

- உணர்ச்சி பூர்வ மிக்க அரச சேவை குழாத்தினரை தேடிவரும் அனைவருக்கும் மனதை கவரும் விதத்தில் புதுமை மிக்க நம்பிக்கையான சேவை
- புதுமையை தேடிச் சென்று உடனடியாக தீர்வுகாண முயலும் பணிக் கலாச்சாரம்.
- தூய்மையான மற்றும் பசுமை மிக்க சூழலினூடாக அத்தியவசியமான தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளும் அழகு மிக்க சூழல்
- நல்லாட்சிக்கு இட்டுச் செல்லல்

## 1.3. பிரதான செயற்பாடுகள்

**அம்பாறை மாவட்ட செயலக கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- நிருவாக பொறுப்புக்கள், நிருவாக விடுமுறை மற்றும் புகையிரத பயணச்சீட்டு
- பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- கிராம செயலகங்களில் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- நெற் கொள்வனவு தொடர்பான நடவடிக்கைகள்


**மாவட்ட செயலக நிதிப் பிரிவின் கடமைப்பாங்கு**

- மாவட்டத்திலுள்ள சகல மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகளுக்கிடையில் நிதி ஒதுக்கீடு மற்றும் கட்டு நிதிகளை பகிர்ந்தளித்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்கறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடல்.
- மாவட்ட செயலகத்திலுள்ள சகல கொடுப்பனவுப் பணிகள்.

**மாவட்ட செயலக நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- சமூக சேவை நடவடிக்கைகள்
- கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள்
- மனித வள அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கைகள் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளர் மற்றும் திடீர் மரண விசாரணையாளர்களை நியமிப்பு செய்வது தொடர்பான நடவடிக்கை.
- ஜூரிமார்களின் பெயர் அட்டவணையை தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்வுகள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- பொதுமக்கள் தொடர்பிலான முறைப்பாட்டு நடவடிக்கைகள்.
- தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை மக்களுக்கு வழங்குதல்.
- அனர்த்தம் மற்றும் சுனாமி மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள.
- சுடுகலன் மற்றும் வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்
- சுற்றுலா விடுதி தொடர்பான நடவடிக்கைகள்

## 1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை



## 1.5மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்

அம்பாறை நகர மையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் வடக்கில் மாவட்ட செயலகம் அமைந்துள்ளது. மாவட்டத்தினுடைய நிருவாகத்திற்குரிய பாரிய கடமைப் பொறுப்புக்கள் இவ் அலுவலகம் மூலம் செய்யப்படுகின்றன. மாவட்ட செயலகம் அமைந்துள்ள கட்டடம் உறுதியானதும், கருங்கல்லினாலும் அமைக்கப்பட்ட பழங்காலக் கட்டடமாக இருப்பதுடன் அது கல்லோயத் திட்டத்தின் கீழே ஸ்தாபிக்கப்பட்டது. அதிகமானவர்களினால் இது அம்பாறை கச்சேரி என அழைக்கப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் கீழ் **20** பிரதேச செயலகங்கள் உள்ளன. அப்பிரதேச செயலகங்களின் **503** கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன அவை பின்வருமாறு

| இல | பிரதேச செயலகம் | கி.சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேச செயலகத்திற்கான தூரம்(KM) |
|---|---|---|---|
| 01 | தெகியத்தக்கண்டிய | 13 | 121 |
| 02 | பதியத்தலாவ | 20 | 82 |
| 03 | மகாஓயா | 17 | 62 |
| 04 | உகண | 55 | 11 |
| 05 | அம்பாறை | 22 | - |
| 06 | தமன | 33 | 17 |
| 07 | லாஹுகல | 12 | 80 |
| 08 | பொத்துவில் | 27 | 75 |
| 09 | திருக்கோவில் | 22 | 42 |
| 10 | ஆலையடிவேம்பு | 22 | 28 |
| 11 | அக்கரைப்பற்று | 28 | 28 |
| 12 | அட்டாளைச்சேனை | 32 | 29 |
| 13 | இறக்காமம் | 12 | 10 |
| 14 | நிந்தவூர் | 25 | 26 |
| 15 | காரைதீவு | 17 | 24 |
| 16 | சாய்ந்தமருது | 17 | 25 |
| 17 | கல்முனை | 29 | 28 |
| 18 | கல்முனை வடக்கு (உபசெயலகம்) | 29 | 28 |
| 19 | நாவிதன்வெளி | 20 | 24 |
| 20 | சம்மாந்துறை | 51 | 20 |

**1.6*அமைச்சு / திணைக்களம் நிறுவனங்கள் கீழுள்ள சபையின் மாகாண /நிதியங்கள்***

இந்த கச்சேரி வளவினுள் பல்வேறுபட்ட திணைக்களகங்களின் அலுவலகங்கள் மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளும் காணப்படுகின்றன அவையாவன,

| | |
|---|---|
| 1. | மாவட்ட சமூர்த்தி அலுவலகம் |
| 2. | மாவட்ட திட்டமில் பிரிவு |
| 3. | உதவிதேர்தல் ஆணையாளர் அலுவலகம் |
| 4. | மாவட்ட வாகனப் போக்குவரத்து அலுவலகம் |
| 5. | மாவட்ட அளவை, நிறுவை மற்றும் சேவைகள் திணைக்கள அலுவலகம் |
| 6. | மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவு |
| 7. | அனர்த்த முகாமைத்துவ பிரிவு |
| 8. | மாவட்ட விளையாட்டு பிரிவு |
| 9. | பிரதி காணி ஆணையாளர் அலுவலகம் |
| 10. | மாவட்ட காணி சீரமைப்பு சபை |
| 11. | மாவட்ட சமூகப் பாதுகாப்பு சபை |
| 12. | உதவி காணியாளர் அலுவலகம் (மாகாணம்) |
| 13. | மாவட்ட காணி பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் திணைக்கள அலுவலகம் |
| 14. | மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் |
| 15. | விவசாயத் திணைக்களத்தின் விதை உறுதிப்படுத்தும் அலுவலகம் |
| 16. | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண அலுவலகம் |

## 1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள்

**NIL**

## 02. அத்தியாயம்

## 02 – முன்னேற்றம், சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

***மாவட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள்***

2022 இல் நிறைவேற்றப்பட்ட முக்கிய அபிவிருத்தித் திட்டம் "கம சமக பிலிசந்தர" திட்டமாகும். இந்த தேசிய அளவிலான வேலைத்திட்டமானது கிராம அபிவிருத்தித் திட்டம், உள்ளூராட்சி அதிகார சபைகளின் அபிவிருத்தித் திட்டம், கிராமிய வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவுசெலவுத் திட்டம் (DCB) ஆகிய நான்கு முக்கிய உப திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதல், சமூக நலன் மேம்பாட்டினை உறுதி செய்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் அதேவேளை மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்க்கப்பட்டது. மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கொவிட்-19, எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை, பொருளாதார மந்தநிலையுடன் தொடர்புடைய பணவீக்கம் மற்றும் பொது அமைதியின்மை ஆகியவற்றினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தாலும், மாவட்ட செயலகத்தால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களை ஆண்டின் முதல் காலாண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருந்தது. மேலும், நிதியமைச்சினால் 26.04.2022 ஆம் திகதி வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எஞ்சிய மூன்று காலாண்டுகளின் செயற்றிட்டங்கள் நிறுத்தப்பட்டன.

அதன்படி, 2022 ஆம் ஆண்டில் அனைத்து சவால்களுக்கும் மத்தியில் கம சமக பிலிசந்தர திட்டத்தின் கீழ் மில்லியன் 459.84 பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு முடியுமாக இருந்தது. மேலும், விவசாய அமைச்சின் ஒருங்கிணைப்புடன் மாவட்ட கால்நடை வளர்ப்புத் துறைக்கான பங்களிப்பை விருத்தி செய்யும் அதேவேளை, மாவட்ட மக்களின் வருமான மட்டத்தை அதிகரிக்கசெய்யும் வகையில் மாவட்டத்தின் 20 பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கிய ஆடு வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

***அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் - 2022 (31.12.2020 ஆம் தினத்திற்கு)***

| # | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | நிறைவு செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் | மொத்த செலவினம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றிற்கு ரூபா 3 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டம்) | 300 | 688 | 211.49 |
| 2 | உள்ளூர் அதிகார சபை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (உள்ளூர் அதிகார சபையொன்றிற்கு ரூபா 4 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டம்) | 179 | 379 | 116.28 |
| 3 | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா ரூபா 100 மில்லியன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் பிரதி தலைவருக்கு ரூபா 20 மில்லியன்) | 150 | 306 | 117.50 |
| 4 | பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவுசெலவு திட்டம் | 15.47 | 110 | 14.57 |
| 5 | ஆடு வளர்ப்பு திட்டம் | 7.08 | 1 | 7.01 |
| **Total** | | **651.55** | **1,484** | **466.85** |

இத்திட்டத்தின் கீழ் ரூபா 7.01 மில்லியன் செலவில் 154 குடும்பங்களுக்கு 308 ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, யானை-மனித மோதல்களை இல்லாதொழிப்பதற்கும், விவசாயிகளின் அறுவடை மற்றும் மக்களின் உயிர் இழப்புகளைத் குறைப்பதற்கும் மின்சார யானை வேலிகள் நிறுவப்பட்டன.

### *01. விவசாயத் துறையின் செயலாற்றுகை, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்தல்*

நாட்டின் மோசமான பொருளாதார நிலை காரணமாக, வேலையிழப்பு, விலைவாசி உயர்வால் வாங்கும் திறன் குறைதல், ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதில் சிரமம் போன்ற பல அசௌகரியங்களை மக்கள் எதிர்கொண்டனர். ஆதலால், ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து குடும்பங்களும் வலுவாக இருக்கவும், பட்டினியால் வாடாமல் இருக்கவும், "உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்ய கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுவூட்ட பல் துறை ஒருங்கிணைந்த பொறிமுறை" என்ற விசேட திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், மாவட்ட செயலகம், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அந்தந்தப் பிரதேசங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கிய வகையில் 503 கிராம மறுமலர்ச்சிக் குழுக்களை மாவட்டச் செயலகத்தால் நிறுவ முடிந்தது.

மாவட்டத்தினுள் பிரதான பயிர்களை பயிரிட்டு தன்னிறைவை அடைவதற்கான எதிர்பார்ப்புடன், 2022 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் அதிகளவு பயிர்ச்செய்கை செய்ய விவசாயிளுக்கு ஊக்குவிப்பினை மாவட்ட செயலகம் வழங்கியது. பின்வரும் அட்டவணை சில முக்கிய பயிர்களின் விளைச்சல் மற்றும் உற்பத்தியின் சுருக்கத்தைக் குறிக்கிறது.

| பயிர் வகை | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்) | அறுவடை (மெ.தொன்) |
|---|---|---|
| நெல் | 61,438 | 239,608 |
| சோளம் | 316.56 | 670.82 |
| மிளகாய் | 114.39 | 444.53 |
| நில கடலை | 136.46 | 145.12 |
| கௌபி | 2,905.50 | 2,378.17 |
| பாசிப்பயறு | 519.58 | 450.87 |
| உளுந்து | 42.23 | 35.59 |
| திணை | 24.45 | 17.65 |
| Gingelly | 23.30 | 16.30 |

*தகவல்: மாவட்ட விவசாய பணிப்பாளர் – விவசாய பிரிவு, மாவட்ட செயலகம், அமபாரை*

மாவட்டத்தின் விவசாயத் துறை பங்களிப்பை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், விவசாயிகளுக்கு வசதியளிக்கும் வகையிலும் பாசிப்பயறு மற்றும் உளுந்து விளைச்சலை எளிதாக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் அறுவடை திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த அறுவடை திட்டத்தின் மொத்த செலவு சுமார் ரூ. 6.2 மில்லியன் மேலும், 2022/23 மஹா பருவத்தில் சுமார் 81,168 ஹெக்டேர் நெல், சுமார் 11,843 ஹெக்டேர் சோளம் மற்றும் சுமார் 60 ஹெக்டேர் குரக்கன் பயிரிடப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் பொதுவாக நுகரப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகள் கிடைப்பதை அதிகரிக்க மாவட்டத்தில் உள்ள அனைத்து வீடுகளையும் உள்ளடக்கிய வீட்டுத்தோட்டப் பணிகளை மேற்கொள்ளவும், வரம்புக்கட்டு பயிர்செய்கை மற்றும் பருவங்களுக்கு இடைப்பட்ட பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் வரம்புக்கட்டு பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதற்காக 25,000 நெல் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 25,000 மரக்கறி விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. பயிர் வகைகளில் ஓக்ரா, புஷிடா, நீள பீன்ஸ், அமரந்தஸ் மற்றும் பாகற்காய் ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ.5மில்லியன்களாகும்.

எரிபொருளின் இன்மை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை விவசாய நடவடிக்கைகளை எதிர்மறையாக பாதித்ததுடன் மக்கள் மத்தியில் அமைதியின்மையை உருவாக்கியது. எவ்வாறாயினும், மாவட்டச் செயலகத்தினால் பொதுமக்களின் அமைதியின்மையை வெற்றிகரமாக நிர்வகித்து மாவட்டத்தின் விவசாயத் துறை மற்றும் மீன்பிடித் துறை நடவடிக்கைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எரிபொருளை விநியோகிக்க முடிந்தது.

மேலும், உரம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் விவசாயிகளிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியதுடன், மாவட்ட செயலகத்தால் இந்தப் பிரச்சினையை சமாளித்து விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை விவசாய அமைச்சு மற்றும் உரிய அதிகாரிகளுடன் முறையான ஒருங்கிணைப்புடன் வழங்க முடிந்தது.

*02.* <u>மாவட்டத்தில் உள்ள தேவையுள்ள மக்களுக்கு ஆதரவளிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் உதவிகளின் கீழ் உதவித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துதல்</u>

உலக உணவு வேலைத்திட்டத்தின் (WFP) ஒத்துழைப்புடன் மகோயா, நாவிதன்வெளி மற்றும் பதியதலாவ பிரதேச செயலக பிரிவுகளில் பண உதவி வேலைத்திட்டம் மற்றும் உணவு உதவி வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. உலக உணவு வேலைத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை வருமாறு.

WFP பண உதவி திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை *(31.12.2022 ஆம் திகதிக்கு)*

| # | பிரதேச செயலக பிரிவு | கொடுப்பனவு செய்யப்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை | கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| 1 | மகோயா | 2,469 | 37.04 |
| 2 | நாவிதன்வெளி | 3,028 | 45.42 |
| 3 | பதியதலாவ | 2,147 | 32.21 |
| | **மொத்தம்** | **7,644** | **114.67** |

WFP உணவு உதவி திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை *(31.12.2022 ஆம் திகதிக்கு)*

| # | பிரதேச செயலக பிரிவு | அனுமதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பெறப்பட்ட உணவு பொருட்கள் (மெ.தொன்) | | | வழங்கப்பட்ட உணவு பொருட்கள் (மெ.தொன்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அரசி | பருப்பு | எண்ணெய் | அரசி | பருப்பு | எண்ணெய் |
| 1 | நாவிதன்வெளி | 3,201 | 160.05 | 64.02 | 14.405 | 159.6 | 63.84 | 14.36 |
| 2 | மகோயா | 2,713 | 135.65 | 54.26 | 12.209 | 132.8 | 53.12 | 11.95 |
| 3 | பதியதலாவ | 4,292 | 214.6 | 85.84 | 19.314 | 213.95 | 85.58 | 19.26 |
| **மொத்தம்** | | **10,206** | **510.3** | **204.12** | **45.927** | **506.35** | **202.54** | **45.57** |

*ஒரு குடும்பத்திற்கு அரிச 5 கி.கி, பருப்பு 20 கி.கி, எண்ணெய், 4.5 கி.கி வழங்கள்ட்டது.

** பங்கிடப்படுவதற்கு 3.95 மெற்றிக் தொன் அரிசி, 1.58 மெற்றிக் தொன் பருப்பு, 0.356 மெற்றிக் தொன் எண்ணெய் எஞ்சியுள்ளது.

மேலும், முன்பள்ளி குழந்தை பருவ நிலையங்களில் உள்ள குழந்தைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் *2022* செப்டம்பர், அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு போசாக்கான காலை உணவு வழங்கப்பட்டது. இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகள் சுமார் 5,031 குழந்தைகள் மற்றும் இத்திட்டத்திற்கான மொத்த செலவு மில்லியன்.ரூபா 32.93ஆகும்.

அதற்கு மேலதிகமாக,, அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக *400* கிராம் அங்கர் பால் பாக்கெட்டுகள் *4,212* இனை பசுமை விவசாய செயல்பாட்டு நிறுவனம் மற்றும் ஃபோன்டெரா பிராண்ட்ஸ் லங்கா ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் போசாக்கு தேவையுடைய தெரிவு செய்யப்பட்ட *2106* பயனாளிகளுக்கு மாவட்ட செயலகத்தால் அன்பளிப்பு செய்யக்கூடியதாக இருந்தது.

## 2022 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளும் சவால்கள்

2022 ஆம் ஆண்டின் இலக்குகளை பூர்த்தி செய்யும் போது மாவட்ட செயலகம் பின்வரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் அந்த சவால்களை அதிக அளவில் நிர்வகிக்க முடிந்தது.

1. மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் மாவட்டத்தின் விவசாய, மீன்பிடித் துறை நடவடிக்கைகள் என்பன எரிபொருள், எரிவாயு தட்டுப்பாட்டினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. ஆகையால், மாவட்ட செயலகம் அனைத்து பிரதேச செயலகங்களின் ஒத்துழைப்புடன் எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகச் செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டதுடன் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அமைதியின்மையை கையாண்டது.
2. நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு, கம சமக பிலிசந்தரா திட்டத்தை ஆண்டின் முதலாவது காலாண்டில் மட்டுமே நடைமுறைப்படுத்த மட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது.
3. விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பல முக்கியமான பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக ஆரம்பத்தில் ஒப்புக்கொண்டதை விட ஒப்பந்தக்காரர்கள் அதிக கட்டணங்களைக் கோரியமையினால் பல கட்டுமானத் திட்டங்களை செயல்படுத்த முடியாது போயின.
4. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக, குறைந்தளவான வருமானம் மற்றும் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய சத்தான உணவைக் கண்டுபிடிப்பதிலில் உள்ள சிரமங்கள் போன்றவற்றிற்கு மாவட்டத்தில் உள்ள மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர். எனவே, மாவட்ட செயலகமானது

பிரதேச செயலகங்கள் மற்றும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து தேவைகளையுடைய மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கியது.

5. சில வாழ்வாதார திட்டங்கள் சரியான நேரத்தில் வழங்குனருக்கு பணம் செலுத்துவதற்கு போதுமான கட்டுநிதி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பான சில பொருட்கள் சந்தையில் கிடைக்காமையினால் முதலாம் காலாண்டில் முடிக்க முடியாமல் போனது.

***2023 ஆண்டிற்கான திட்டங்கள்***

மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் அதே வேளையில் குறைந்த வருமான அளவிலான மக்களுக்கு நியாயமான வருமானத்தை ஈட்ட உதவுவதற்காகவும் பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

1. 2023 ஆம் ஆண்டிற்கான உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து திட்டத்தைத் தொடரவும், மக்களுக்கு அவர்களின் அன்றாட ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய ஊட்டச்சத்து உணவுகளைக் கண்டுபிடிப்பதில் சிரமங்கள் உள்ளன. மேலும், தன்னிறைவை ஊக்குவிக்க 12,575 நிலையான வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
2. மாவட்டத்தில் தற்போதுள்ள காணிகளை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம், கைவிடப்பட்ட நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் காணியின் துஷ்பிரயோகத்தைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
3. பாசிப்பயறு, உளுந்து மற்றும் நிலக்கடலைகளை பயிரிடும் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் விவசாயத் துறையில் மாவட்ட பங்களிப்பை அதிகரித்தல். மேலும், பயிர் பாதுகாப்பு நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பெரிய அளவிலான விவசாயிகளுக்கு காற்று துப்பாக்கிகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.
4. சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வலுவூட்டும் நிகழ்சித் திட்டங்களை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துதல். அதனடிப்படையில், அனைத்து பிரதேச பிரிவுகளையும் உள்ளடக்கிய 100 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரை உருவாக்குவதுடன் சுமார் 20 தொழில்துறை அல்லது விவசாய ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி திட்டங்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.
5. 6. வறுமை ஒழிப்பு எதிர்பார்ப்புடன் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு சுமார் 503 குடும்பங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்த எதிர்பார்த்தல்.
6. மாவட்டத்தினுள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சுமார் 20 மரம் நடும்/காடு வளர்ப்பு திட்டங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.
7. விவசாயிகளின் விளைச்சலைப் பாதுகாக்கவும், மனித மற்றும் யானை உயிர்களைக் காப்பாற்றவும் யானை-மனித மோதல்களைத் தணிக்க மின்சார யானை வேலிகளை விரிவுபடுத்துதல் போன்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.
8. மாவட்டத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் ஒரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தும் வகையில் பாதுகாவலர் பெற்றோர் அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.
9. மாவட்டத்தில் சுகாதார மற்றும் கல்வி வசதிகளின் தரத்தை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்துவதுடன், பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சுமார் 503 குழந்தைகள் மீண்டும் பாடசாலையில் இணைத்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.
10. மாவட்டத்தில் போதைக்கு அடிமையான சுமார் 503 பேரையாவது புனர்வாழ்வளிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.



ஜே.ம்.எ.ஏ. டக்லஸ்

அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்

அம்பாறை மாவட்டம்

# அத்தியாயம் - 03
# 03.2022 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 03.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

**மாவட்ட செயலகம் - அம்பாறை**

**2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | **1** | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | **2** | - | - | **ஏசீஏ-1** |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | **3** | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | **4** | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 4,929,631,000 | 4,744,133,000 | **ஏசீஏ-3** |
| - | வைப்புகள் | | 502,211,204 | 411,124,440 | **ஏசீஏ-4** |
| 50,000,000.00 | முற்பணக் கணக்குகள் | | 64,040,672 | 62,172,640 | **ஏசீஏ-5** |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | 19,505 | - | |
| 50,000,000.00 | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **5,495,902,381** | **5,217,430,080** | |
| **50,000,000.00** | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **5,495,902,381** | **5,217,430,080** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **43,642,547** | | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **5,452,259,834** | **5,217,430,080** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 1,096,500,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | **5** | 1,069,390,882 | 926,830,335 | |
| 175,100,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | **6** | 169,038,058 | 133,500,465 | **ஏசீஏ-2(ii)** |
| 4,400,000.00 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 3,498,914 | 333,241,486 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | **9** | - | - | |
| 1,276,000,000.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **1,241,927,854** | **1,393,572,286** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 16,900,000.00 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 19,564,612 | 17,608,631 | |
| 28,000,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 27,942,223 | 57,178,718 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | **-ஏசீஏ-2(ii)** |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 1,100,000.00 | திறன் விருத்தி | **14** | 763,410 | 842,590 | |
| 472,000,000.00 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | 459,836,461 | - | |
| 518,000,000.00 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **508,106,706** | **75,629,940** | |
| - | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 588,271,350 | 454,551,929 | **ஏசீஏ-4** |
| 7,000,000.00 | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 66,190,570 | 54,133,289 | **ஏசீஏ-5** |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | 21,505 | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **654,483,425** | **508,685,218** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 2,404,517,984 | 1,977,887,444 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **3,047,741,850** | **3,239,542,636** | |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | 3,047,741,850 | 3,239,542,636 | **ஏசீஏ-7** |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | - | **ஏசீஏ-3** |

## 3.2. நிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

மாவட்ட செயலகம் - அம்பாறை
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2022 ரூபா | 2021 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொததுகளை அறறது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 3,718,140,211 | 3,423,420,682 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 203,845,266 | 201,695,368 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **3,921,985,477** | **3,625,116,050** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 124,280,447 | 36,070,403 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 3,718,140,211 | 3,423,420,682 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைய பொறுப்புகளை** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 79,564,819 | 165,624,965 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **3,921,985,477** | **3,625,116,050** |

பக்க இலக்கம் 7 முதல் 28 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 29 முதல் 36வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்<br>நீல் பண்டார ஹபுஹின்ன,<br>பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>திகதி: 2023.02. 27 | கணக்கீட்டு உத்தியோகத்தர்<br>ஜே.எம்.எல்.டக்லஸ்,<br>மாவட்ட செயலாளர்<br>திகதி :2023.02 | பிரதான கணக்காளர் ,<br>எஸ்.எல்.ஆதம்பாவா,<br>மாவட்ட செயலகம்<br>திகதி :2023.02 20 |

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
Home Affairs Division

J.M.A. Douglas
Government Agent
District Secretary
Ampara District

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

## 3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

**மாவட்ட செயலகம் - அம்பாறை**
**2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2022 ரூபா** | **2021 ரூபா** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 282,451,089 | 318,688,155 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 4,929,631,000 | 4,744,133,000 |
| முற்பணங்களை அறவிடல் | 85,305,672 | 79,785,572 |
| வைப்புக்களின் பெறுகை | 502,211,204 | 411,124,440 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **5,799,598,965** | **5,553,731,167** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 1,237,114,945 | 1,060,268,735 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 3,498,914 | 333,241,486 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 3,324,266,700 | 3,555,365,455 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 43,642,547 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 94,697,803 | 74,673,623 |
| வைப்புக் கொடுப்பனவு | 588,271,350 | 454,551,929 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **5,291,492,259** | **5,478,101,228** |
| **தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **508,106,706** | **75,629,940** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 508,106,706 | 75,629,940 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **508,106,706** | **75,629,940** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | - | - |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

## 3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

ஏசீஏ-1

### மாவட்ட செயலகம் - அம்பாறை
### 2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தர்: செலவின தலைப்பு இல:270

ரூபா.

| அரசிறை குறியீடு | வருமானத் தலைப்பு | அரசிறை மதிப்பீடு (1) | | வருமானத்தைத் திரட்டுதல் | | | நிலுவை வருமானங்களை திரட்டுதல்(3) | வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் | | | தேறிய வருமானம் 5=2(iii)+4(iii) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு 1(i) | திருத்திய மதிப்பீடு 1(ii) | தொடர்புடைய அமைச்சினால்/திணைக்களத்தினால் திரட்டப்பட்டது 2(i) | ஏனைய அமைச்சினால்/திணைக்களத்தினால் திரட்டப்பட்டது 2(ii) | மொத்தம் 2(iii)=2(i)+2(ii) | | காசாக 4(i) | தவறுகளைத் திருத்துதல் 4(ii) | மொத்தம் 4(iii)=4(i)+4(ii) | |
| | | | | பொருத்தமற்றது | | | | | | | |
| | முழுமொத்தம் | | | | | | | | | | |

.....
பிரதான கணக்காளர்
எஸ்.எல்.ஆதம்பாவா,
மாவட்ட செயலகம்,
திகதி: 2023.02.

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

.....
வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஜே.எம்.ஏ.டக்ளஸ்
மாவட்ட செயலாளர்,
திகதி: 2023.02.

J.M.A. Douglas
Government Agent
District Secretary
Ampara District

மாவட்ட செயலகம் - அம்பாறை

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 270

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : அம்பாறை

ரூபா

| செலவினக் குறியீடு | குறிப்பு | ஏற்பாடுகள் | | | | | செலவினம் | | | தேறிய விளைவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதியிடல் (குறியீடு இல.) | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | நிதி 66/69 மாற்றல்கள் (3) (-)/+ | மொத்தத் தேறிய ஏற்பாடு (4)=(1)+(2)+(3) | காகப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் (5) | நிதி. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) (6) | மொத்தச் செலவினம் (7)= (5)+(6) | சேமிப்பு / மிகை (8)=(4)-(7) | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை (9)=(8)/(4)* 100 | வேறுபாட்டுக்கான காரணம் |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | | | | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | | | | | | |
| குறியீடு | | | | | | | | | | | | |
| **கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு** | 5 | | | | | | | | | | | |
| **ஆளுக்குரிய வேதனங்கள்** | | | | | | | | | | | | |
| 1001 சம்பளமும் கூலியும் | | 11 | 698,000,000 | - | (1,500,000) | 696,500,000 | 687,319,590 | - | 687,319,590 | 9,180,410 | 1.32 | சாதாரண சேமிப்பு |
| 1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | | 11 | 45,500,000 | - | - | 45,500,000 | 42,417,787 | - | 42,417,787 | 3,082,213 | 6.77 | செவிசைக் கட்டுப்படுத்துதல் |
| 1003 ஏனைய கொடுப்பனவுகள் | | 11 | 353,000,000 | - | (1,500,000) | 351,500,000 | 338,337,510 | 1,315,995 | 339,653,505 | 11,846,495 | 3.37 | சாதாரண சேமிப்பு |
| | | | **1,096,500,000** | - | **(3,000,000)** | **1,093,500,000** | **1,068,074,887** | **1,315,995** | **1,069,390,882** | **24,109,118** | | |
| **செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்** | 6 | | | - | | | | | | - | | |
| **பிரையாணச் செலவினம்** | | | | - | - | | | | | - | | |
| 1101 உள்ளூர் | | 11 | 19,800,000 | - | - | 19,800,000 | 19,767,008 | - | 19,767,008 | 32,992 | 0.17 | ளரிபொருள் நெருக்கடி |
| **மொத்தம் (அ)** | | | **19,800,000** | - | - | **19,800,000** | **19,767,008** | - | **19,767,008** | **32,992** | | |
| **வழங்கல்கள்** | | | | - | - | | | | | - | | |
| 1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும் | | 11 | 17,800,000 | - | - | 17,800,000 | 17,796,275 | - | 17,796,275 | 3,725 | 0.02 | சாதாரண சேமிப்பு |
| 1202 - எரிபொருள் | | 11 | 34,940,000 | - | - | 34,940,000 | 33,821,531 | - | 33,821,531 | 1,118,469 | 3.20 | ளரிபொருள் நெருக்கடி |
| 1203 உணவும் சீருடைகளும் | | 11 | 460,000 | - | - | 460,000 | 262,000 | - | 262,000 | 198,000 | 43.04 | குறைவான தகுதியுள்ள |
| 1205 ஏனையவை | | | - | - | - | - | - | - | - | - | | விண்ணப்பதாரர்கள் |
| **மொத்தம் (ஆ)** | | | **53,200,000** | - | - | **53,200,000** | **51,879,806** | - | **51,879,806** | **1,320,194** | | |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | - | - | | | | | - | | |
| 1301 வாகனங்கள் | | 11 | 21,000,000 | - | - | 21,000,000 | 20,017,956 | - | 20,017,956 | 982,044 | 4.68 | செலவினைக் கட்டுப்படுத்தல் |
| 1302 பொறி, இயந்திரம், உபகரணம் | | 11 | 6,200,000 | - | - | 6,200,000 | 6,130,016 | - | 6,130,016 | 69,984 | 1.13 | செலவினைக் கட்டுப்படுத்தல் |
| 1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | | 11 | 16,500,000 | - | - | 16,500,000 | 16,371,975 | - | 16,371,975 | 128,025 | 0.78 | செலவினைக் கட்டுப்படுத்தல் |
| **மொத்தம் ( இ )** | | | **43,700,000** | - | - | **43,700,000** | **42,519,947** | - | **42,519,947** | **1,180,053** | | |
| **சேவைகள்** | | | | - | - | | | - | | - | | |
| 1401 போக்குவரத்து | | 11 | 600,000 | - | - | 600,000 | 600,000 | - | 600,000 | - | - | |
| 1402 தபால், தொலைத்தொடர்பு | | 11 | 9,200,000 | - | - | 9,200,000 | 7,923,053 | - | 7,923,053 | 1,276,947 | 13.88 | ளரிபொருள் நெருக்கடி |
| 1403 மின்சாரமும் நீரும் | | 11 | 17,600,000 | - | - | 17,600,000 | 16,136,059 | - | 16,136,059 | 1,463,941 | 8.32 | செலவு ஏற்படவில்லை |
| 1404 வாடகை மற்றும் உள்ளக வரி | | 11 | 1,000,000 | - | - | 1,000,000 | 484,214 | - | 484,214 | 515,786 | 51.58 | செலவினைக் கட்டுப்படுத்தல் |
| 1409 ஏனையவை | | 11 | 30,000,000 | - | - | 30,000,000 | 29,727,971 | - | 29,727,971 | 272,029 | 0.91 | |
| **மொத்தம் ( ஈ )** | | | **58,400,000** | - | - | **58,400,000** | **54,871,298** | - | **54,871,298** | **3,528,702** | | |
| **ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)** | | | **175,100,000** | - | - | **175,100,000** | **169,038,058** | - | **169,038,058** | **6,061,942** | | |
| **செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்** | 7 | | | - | - | | | | | - | | |
| **மாற்றங்கள்** | | | - | - | - | - | - | - | - | - | | |
| 1501 நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் | | 11 | - | - | - | - | - | - | - | - | | |
| 1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி | | 11 | 4,400,000 | - | - | 4,400,000 | 3,498,914 | - | 3,498,914 | 901,086 | 20.48 | விண்ணப்பம் கிடைக்கவில்லை |
| **மொத்தம்** | | | | - | - | | | | | - | | |
| **செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம்** | 9 | | - | - | - | | | | | - | | |
| 1701 நட்டங்களும் பதிவழிப்பும் நிகழ்த்தக்க நிகழ்ச்சித் திட்டம் (1) | | 11 | - | - | - | - | - | - | - | - | | |
| | | | | - | - | | | | | - | | |
| **முழு மொத்தம் (குறிப்பு 5 முதல் 9 வரை) மொத்த மீண்டுவரும் செலவினம்** | | 11 | **1,276,000,000** | - | **(3,000,000)** | **1,273,000,000** | **1,240,611,859** | **1,315,995** | **1,241,927,854** | **31,072,146** | | - |

மாவட்ட செயலகம் - அம்பாறை
2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 270

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : அம்பாறை

ரூபா

| செலவினக் குறியீடு | குறிப்பு | ஏற்பாடுகள் | | | | | செலவினம் | | | தேறிய விளைவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதியிடல் (குறியீட்டு இல.) | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஏற்பாடு | காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்) | மொத்தச் செலவினம் | சேமிப்பு / மிகை | நிரூபிக்கப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
| | | | (1) | (2) | (3) (-)/+ | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7)= (5)+(6) | (8)=(4)-(7) | (9)=(8)/(4)*100 | |
| மூலதனம் செலவினம் | | | | | | | | | | - | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | | | | - | | |
| பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு | | | | | | | | | | - | | |
| முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | | | | | | | | | - | | |
| 2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | | 11 | 10,400,000 | - | 3,000,000 | 13,400,000 | 13,393,188 | - | 13,393,188 | 6,812 | 0.05 | சாதாரண சேமிப்பு |
| 2002 பொறி, இயந்திரம், உபகரணம் | | 11 | 2,000,000 | - | - | 2,000,000 | 1,908,709 | - | 1,908,709 | 91,291 | 4.56 | கொடுப்பனவிற்கான தேவை ஏற்படவில்லை. |
| 2003 வாகனங்கள் | | 11 | 4,500,000 | - | - | 4,500,000 | 4,262,716 | - | 4,262,716 | 237,284 | 5.27 | கொடுப்பனவிற்கான தேவை ஏற்படவில்லை. |
| மொத்தம் (அ) | | | 16,900,000 | - | 3,000,000 | 19,900,000 | 19,564,612 | - | 19,564,612 | 335,388 | | |
| மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | | | | | | | | | - | | |
| 2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | | 11 | 4,000,000 | - | - | 4,000,000 | 3,974,100 | - | 3,974,100 | 25,900 | 0.65 | சாதாரண சேமிப்பு |
| 2103 பொறி, இயந்திரம், உபகரணம் | | 11 | 4,000,000 | - | - | 4,000,000 | 3,979,813 | - | 3,979,813 | 20,188 | 0.50 | சாதாரண சேமிப்பு |
| 2104 கட்டிடங்களும், கட்டமைப்புக்களும் | | 11 | 20,000,000 | - | - | 20,000,000 | 19,988,310 | - | 19,988,310 | 11,690 | 0.06 | |
| மொத்தம் (ஆ) | | | 28,000,000 | - | - | 28,000,000 | 27,942,223 | - | 27,942,223 | 57,777 | | |
| மனித வள அபிவிருத்தி | 14 | | | | | | | | | - | | |
| 2401 பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும் | | 11 | 1,100,000 | - | - | 1,100,000 | 763,410 | | 763,410 | 336,590 | 30.60 | தேவையேற்படவில்லை. |
| மொத்தம் (இ) | | | 1,100,000 | - | - | 1,100,000 | 763,410 | - | 763,410 | 336,590 | | |
| ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | | | | | | | | | - | | |
| 2509 ஏனையவை | | 11 | 472,000,000 | - | | 472,000,000 | 459,836,461 | - | 459,836,461 | 12,163,539 | 2.58 | |
| மொத்தம் (ஈ) | | | 472,000,000 | - | - | 472,000,000 | 459,836,461 | - | 459,836,461 | 12,163,539 | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | | | | - | | |
| பொது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | | 518,000,000 | - | 3,000,000 | 521,000,000 | 508,106,706 | - | 508,106,706 | 12,893,294 | - | |
| முழு மொத்தம் (குறிப்பு 5 - 15) | | | 1,794,000,000 | - | - | 1,794,000,000 | 1,748,718,565 | 1,315,995 | 1,750,034,560 | 43,965,440 | - | |

.....
பிரதான கணக்காளர்,
எஸ்.எல்.ஆதம்பாவா,
திகதி :2023.02

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

# மாவட்ட செயலகம் - அம்பாறை
## 2022 ஆம் ஆண்டிற்கான பணி முற்பண கணக்கின் அறிக்கை

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : அம்பாறை
செலவின தலைப்பு இல : 270

ரூபா

| முற்பணக் கணக்கு இலக்கம் | 2022 சனவரி 1 இல் உள்ளவாறு பண முற்பண மீதி 1 | | | கிடைக்கப்பெற்ற பணமற்பணம் 2 | | | தீர்க்கப்பட்ட பணமற்பணம் 3 | | | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பண முற்பண மீதி 4 | | | 2022 டிசம்பர் 31இல்உள்ளவாறான நிறுவன புத்தகங்களின் படி பணமுற்பண | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி புத்தகங்க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம் | தீர்க்கப்படாத பணமுற்பணங்கள் (தீர்க்கப்படாத உப பணமுற்பணங்கள் தவிர்ந்த) | மொத்தம் | திறைசேரி | ஏனைய மூலங்கள் | மொத்தம் | செலவினம் | காக | மொத்தம் | தீர்க்கப்படாத உப பணமற்பணம் மீதி | தீர்க்கப்படாத பணமுற்பணங்கள் | மொத்தம் | *5 | 6 |
| | 1(i) | 1(ii) | 1(iii) | 2(i) | 2(ii) | 2(iii)=2(i)+2(ii) | 3(i) | 3(ii) | 3(iii)=3(i)+3(ii) | 4(i) | 4(ii) | 4(iii)=4(i)+4(ii) | 5=1(iii)+2(iii)-3(iii) | |
| 7002/0/0288/0/22 | - | - | - | 4,929,631,000 | 626,687,402 | 5,556,318,402 | 5,556,318,402 | - | 5,556,318,402 | - | - | - | - | - |

1. மேலே 4 மற்றும் 6 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான
(1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2022.12.31 திகதியன்று பண மீதி .....
(2) ஏனைய காரணங்கள்- .....

இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.
மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

.....
பிரதான கணக்காளர்,
எஸ்.எல்.ஆதம்பாவா,
திகதி : 2023.02. 20

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

# மாவட்ட செயலகம் - அம்பாறை

## 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் கூற்று

செலவின தலைப்பு இல : 270

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : அம்பாறை

ரூபா

| வைப்புக் கணக்குகளின் பெயர் | வைப்பு இலக்கம் | 2022 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி | வருடக் காலப்பகுதியில் செலவு வைக்கப்பட்டது | வருடக் காலப்பகுதியில் வரவு வைக்கப்பட்டது | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | திறைசேரிப் புத்தகங்களின்படி 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| பிணை வைப்புகள் | 6000-0-0-0001-0089 | 4,410,605 | 5,902,011 | 7,931,660 | 2,380,956 | 2,380,956 |
| கேள்விமனு வைப்புகள | 6000-0-0-0002-0119 | 2,732,527 | 604,780 | 3,218,307 | 119,000 | 119,000 |
| கூட்டுத்தாபனம் மற்றும் நிதியம் | 6000-0-0-0014-0013 | 12,951,021 | 64,114,159 | 72,254,790 | 4,810,389 | 4,810,389 |
| அரசாங்கத்திற்கு உரிமைமாற்றப்பட்ட நிறுவனங்கள் | 6000-0-0-0016-0067 | 68,641,643 | 61,395,604 | 87,015,170 | 43,022,077 | 43,022,077 |
| நட்டஈடு | 6000-0-0-0017-0020 | - | - | - | - | - |
| செலவினத்தின் மீள்நிரப்பலுக்காகக் கிடைத்த நிதி | 6000-0-0-0020-0011 | 76,889,168 | 370,194,650 | 417,851,422 | 29,232,396 | 29,232,396 |
| | | **165,624,965** | **502,211,204** | **588,271,350** | **79,564,819** | **79,564,819** |

.....

பிரதான கணக்காளர்
எஸ்.எல்.ஆதம்பாவா,
திகதி : 2023.02. 20

20

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

# மாவட்ட செயலகம் - அம்பாறை
## 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள் கூற்று

செலவின தலைப்பு இல : 270 அமைச்சின்.'.திணைக்களத்தின்.'.மாவட்டச் செயலகத்தின் பெயர் :அம்பாறை

ரூபா

| முற்பண கணக்குகளின் பெயர் | முற்பண கணக்கு இலக்கம் | முற்பண கணக்குகளின் எண்ணிக்கை | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி (1) | செலவினத்தின் அதிகபட்ச எல்லைகள் ரூபா ..... | | பெறுகைகளின் அதிகபட்ச எல்லை ரூபா ..... | | வரவு மீதியின் அதிகபட்ச எல்லை ரூபா ..... | பொறுப்புக்களின் அதிகபட்ச எல்லை ரூபா ..... | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின்'படி மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வருடத்தினுள் வரவு வைத்தல் (2) | | வருடத்தினுள் செலவு வைத்தல் (3) | | உள்ளவாறு மீதி 4=(1)+(2)-(3) | | |
| | | | | காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | | | |
| (1) அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | 8493/0/0270/270/27001 | 20 | 201,695,368 | 61,985,068 | 4,205,502 | 57,725,915 | 6,314,758 | 203,845,266 | - | 203,845,266 |
| (2) ஏனைய முற்பணங்கள் | 7000/0/0250/0/30 | - | - | - | - | - | - | - | - | - |

.....

பிரதான கணக்காளர்,
எஸ்.எல்.ஆதம்பாவா,
திகதி : 2023.02. 20

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

ACA - 6



**Non Financial Asset Acct Summary for the Month of December 2022**

To

**District Secretariat Ampara (270)**

From

**Director General, ,**
**Department of State Accounts, ,**

**General Treasury, Colombo1.**

Printed By **Huzainca2017**

New Table No **:SA-80**

Old Table No :BTBL 72A

Report Date 2/17/2023 9:27:50 AM

FINAL New CIGAS 2022 FINAL

| Head | Code | Opn_Bal | Upto_Last_Month | Current_DR | Current_CR | Clsn_Balance |
|---|---|---|---|---|---|---|
| 270 | 9152-0-0-270-0-0-0 | 661,191,395.59 | -600,645.35 | 2,289,546.25 | 218,000.00 | 662,662,296.49 |
| 270 | 9153-0-0-270-0-0-0 | 1,479,609,000.00 | 202,200,000.00 | 0.00 | 0.00 | 1,681,809,000.00 |
| 270 | 9160-0-0-270-0-0-0 | 59,758,515.56 | 17,802,970.08 | 0.00 | 0.00 | 77,561,485.64 |
| 270 | 9151-0-0-270-0-0-0 | 1,222,861,770.84 | 71,060,318.39 | 2,185,340.04 | 0.00 | 1,296,107,429.27 |

This is a computer-generated document. No signature is required.

Report Generated by the new CIGAS Web Application--Developed by S.Tharshan - Director, Dept of State Accounts

## Cumulative Non Financial Asset Accounts Report- Central Govt-2022

**Land-9153:** 1,681,809,000.00 Table: SA 82
**Building- 9151:** 1,296,107,429.27 Year: 2022
**Machinary-9152:** 662,662,296.49 Rpt Date 2/17/2023 9:29:06 AM
**WIP-9160:** 77,561,485.64 Head 270
**Intangible-9154:** 0.00
**Lease-9180:** 0.00

| Ledger | category | Item | Code | Opn_Bal | Opn_Bal_Add | TransferIn | Purchase | Disposal | Balance |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9151 | 1.1-Dwellings | | 61111 | 375,058,866.65 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 375,058,866.65 |
| | | Garages | ****6111102 | 3,028,077.62 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 3,028,077.62 |
| | | Hotels & Restaurants | ****6111106 | 2,581,118.43 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 2,581,118.43 |
| | | Quarters | ****6111107 | 350,379,670.60 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 350,379,670.60 |
| | | Circuit Bunglows | ****6111108 | 19,070,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 19,070,000.00 |
| 9151 | 1.2-Non Residential Building | | 61112 | 844,112,258.68 | 104,000,000.00 | 0.00 | 2,185,340.00 | 29,249,036.06 | 921,048,562.62 |
| | | Office Building | ****6111201 | 838,659,315.08 | 104,000,000.00 | 0.00 | 2,185,340.00 | 29,249,036.06 | 915,595,619.02 |
| | | Building for Public Entertainment | ****6111204 | 5,452,943.60 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 5,452,943.60 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9160 | 1.4-WIP-Building & Structure | | 61114 | 59,758,515.56 | 0.00 | 0.00 | 17,802,970.08 | 0.00 | 77,561,485.64 |
| | | WIP-Building & Structure | ****611140 | 47,320,275.71 | 0.00 | 0.00 | 14,642,812.50 | 0.00 | 61,963,088.21 |
| | | Building for Public Entertainment | ****6111411 | 860,344.35 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 860,344.35 |
| | | Office Building | ****611148 | 11,577,895.50 | 0.00 | 0.00 | 3,160,157.58 | 0.00 | 14,738,053.08 |
| 9152 | 2.1-Transport Equipment | | 61121 | 289,058,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 289,058,500.00 |
| | | Passenger vehicle | ****6112101 | 279,508,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 279,508,500.00 |
| | | Agricultural vehicle | ****6112103 | 9,145,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 9,145,000.00 |
| | | Motor cycle | ****6112109 | 405,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 405,000.00 |
| 9152 | 2.2-Other Machinary & Equipment | | 61122 | 370,912,102.59 | 4,544,307.45 | 0.00 | 6,220,182.50 | 8,072,796.05 | 373,603,796.49 |
| | | Office Equipment | ****6112201 | 42,019,196.00 | 491,350.00 | 0.00 | 184,840.50 | 1,272,400.00 | 41,422,986.50 |
| | | Computer Equipment | ****6112202 | 109,833,028.10 | 2,641,239.00 | 0.00 | 3,207,690.00 | 3,797,133.00 | 111,884,824.10 |
| | | Electrical Equipment | ****6112203 | 54,552,746.75 | 246,970.00 | 0.00 | 1,127,455.00 | 1,104,108.00 | 54,823,063.75 |
| | | Communication Equipment | ****6112204 | 14,634,396.27 | 196,400.00 | 0.00 | 212,865.25 | 193,900.00 | 14,849,761.52 |
| | | Furniture | ****6112205 | 148,634,976.47 | 916,898.45 | 0.00 | 1,487,331.75 | 1,705,255.05 | 149,333,951.62 |
| | | Musical Instruments | ****6112206 | 0.00 | 51,450.00 | 0.00 | 0.00 | 0.00 | 51,450.00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Sports equipment | ****6112208 | 12,200.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 12,200.00 |
| | | Paintings Sculptures & other Antiques | ****6112209 | 6,400.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 6,400.00 |
| | | Books Periodical & Journals | ****6112210 | 8,100.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 8,100.00 |
| | | Laboratory Instruments | ****6112211 | 59,200.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 59,200.00 |
| | | Industrial & Manufacturing Equipment | ****6112212 | 26,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 26,000.00 |
| | | Construction Eqipment | ****6112213 | 9,450.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 9,450.00 |
| | | Broadcasting Equipment | ****6112214 | 860,545.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 860,545.00 |
| | | Defence Equipment | ****6112215 | 4,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 4,000.00 |
| | | Agricultural & Dairy Farm Equipment | ****6112216 | 247,364.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 247,364.00 |
| | | Fire Protection Equipment | ****6112217 | 4,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 4,500.00 |
| 9153 | 4.1-Land | | 61410 | 1,479,609,000.00 | 202,200,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 1,681,809,000.00 |
| | | Land | ****614100 | 1,479,609,000.00 | 202,200,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 1,681,809,000.00 |

REMARKS

This is a computer-generated document. No signature is required.

-

Report Generated by the new CIGAS Web Application--Developed by S.Tharshan - Director, Dept of State Accounts

# பணிமுற்பண இணக்க அறிக்கை

| | | |
|---|---|---|
| அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருவாய் | - | |
| மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தால் ஏற்படும் செலவு | 3,324,266,700 | |
| பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட வரவு | 28,507,233 | |
| பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின் அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட செலவு | 4,999,415 | 3,357,773,348 |
| குறைவாக : | | |
| மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடல் நிறுவனத்தால் சேகரிக்கப்படும் வருவாய் | 282,451,089 | |
| அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக மற்ற நிறுவனங்களால் செய்யப்படும் செலவு | 1,315,995 | |
| பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட செலவு | 25,895,946 | |
| பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின் அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட வரவு | 368,468 | 310,031,498 |
| **2022 டிசம்பர் 31 இல் உள்ள பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | **3,047,741,850** |

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| 10.03.07.02 | பதிவுக் கட்டணம் (பதிவாளர் நாயகம் திணைக்களம்) | - | - | 33,134,286.00 | - |
| 10.03.07.03 | வனப் பாதுகாப்புத்துறை வருவாய் | - | - | 477,509.36 | - |
| 10.03.07.05 | உரிம கட்டணம் (பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடையது) | 265,000.00 | 265,000.00 | 258,590.00 | 97.58 |
| 10.03.07.99 | ஏனையவை ( உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தொடர்புடையது) | 7,000,000.00 | 6,000,000.00 | 4,103,741.01 | 68.40 |
| 20.02.01.01 | அரச கட்டடம் மற்றும் வீட்டுவசதிக்கான வாடகை | 3,250,000.00 | 3,250,000.00 | 2,880,884.74 | 88.64 |
| 20.02.01.03 | காணி மற்றும் ஏனையவைக்கான வாடகை | - | - | 22,812,563.85 | - |
| 20.02.02.99 | வட்டி மற்றும் ஏனையவை | 12,500,000.00 | 12,500,000.00 | 10,556,915.82 | 84.46 |
| 20.03.01.00 | திணைக்கள விற்பனைகள் | - | - | - | - |
| 20.03.02.13 | பரீட்சை மற்றும் ஏனைய கட்டணங்கள் | - | - | 35,185.00 | - |
| 20.03.02.14 | மோட்டார் போக்குவரத்து சட்டம் மற்றும் ஏனைய ரசீதுகளின கட்டணம் | - | - | 82,919,580.00 | - |
| 20.03.02.03 | தனிநபர் பதிவுக் கட்டணம் | - | - | 7,409,650.00 | - |
| 20.03.02.99 | பலவித சில்லறை வஸ்த்துக்கள் | 2,750,000.00 | 1,500,000.00 | 441,638.41 | 29.44 |
| 20.03.07.00 | நெல் விற்பனை | - | - | - | - |
| 20.03.99.00 | பிற ரசீதுகள் | 19,500,000.00 | 15,000,000.00 | 37,522,520.96 | 250.15 |
| 20.04.01.00 | மத்திய அரசுக்குரிய வருவாய் | - | - | 76,764,715.34 | - |

## 3.6 ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஏசீஏ - 2

### மாவட்ட செயலகம் - அம்பாறை

### 2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல :

மாவட்ட செயலகத்தின் பெயர்: அம்பாறை

ரூபா

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | செலவினத் தலைப்பு | வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | நி.ஒ 66/69 மாற்றல்கள் (3) | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3) | மொத்தச் செலவினம் (5) | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5) |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் (1) | (1) மீண்டுவரும் | 1,276,000,000 | - | (3,000,000) | 1,273,000,000 | 1,241,927,853 | 31,072,147 |
| | (2) மூலதனம் | 518,000,000 | - | 3,000,000 | 521,000,000 | 508,106,706 | 12,893,294 |
| | முழு மொத்தம் | **1,794,000,000** | **-** | **-** | **1,794,000,000** | **1,750,034,559** | **43,965,441** |

.....

பிரதான கணக்காளர்

எஸ்.எல்.ஆதம்பாவா,

திகதி :2023.02.

S.L. Athambawa
Chief Accountant
District Secretariat
Ampara

**3.7. நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு**

| தொடர் இல | ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு/ திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மைச் செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1 | புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 101-2-5-23-2104 கலாசார நிலையம் நிர்மாணித்தல் (மகஓய, உஹன, சாய்ந்தமருது) | 19,781,398.00 | 19,781,398.00 | 17,983,596.80 | 90.91 |
| 2 | | 101-2-6-1-2205 காணி சுவீகரிப்பதற்கான நிர்வாகச் செலவு (பொத்துவில் முகுது மகா விகாரை) | 475,000.00 | 475,000.00 | - | 0.00 |
| 3 | | 101-2-6-8-2205 முன்னேற்றம் அற்ற விகாரைகளை முன்னேற்றும் வேலைத்திட்டம் 2022 | 7,546,623.00 | 7,546,623.00 | 1,546,623.00 | 20.49 |
| 4 | | 101-2-6-9-2205 நிலையான புண்ய கிராமம் வேலைத்திட்டம் | 176,500.00 | 176,500.00 | 101,500.00 | 57.51 |
| 5 | | 101-2-9-1-2202 பதியதொர விகாரையின் சிறீ மகாபோதி விகாரையின் வேலி அமைத்தல் | 1,000,000.00 | 1,000,000.00 | 1,000,000.00 | 100.00 |
| 6 | பாதுகாப்பு அமைச்சு – அனர்த்த முகாமைத்துவ பிரிவு | 103-2-17-2-2509 அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்தை செயற்படுத்தல் (கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள்) | 5,356,972.74 | 5,356,972.74 | 5,356,972.74 | 100.00 |
| 7 | | 103-2-18-7-2506 வீடுகள் பாதிப்புக்கான நஷ்டஈடு | 9,563,037.95 | 9,563,037.95 | 7,376,896.95 | 77.14 |
| 8 | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | 110-1-4-5-2202 நல்லிணக்கம் தொடர்பான அறிவுறுத்தும் வேலைத்திட்டம் | 660,000.00 | 660,000.00 | 655,215.00 | 99.28 |
| 9 | | 110-1-5-19-2509 தேசிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை செயற்படுத்தல் | 1,742,890.00 | 1,742,890.00 | 1,460,369.00 | 83.79 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | சுகாதார அமைச்சு | 111-02-15-011-2509-062(11) சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் | 1,264,800.00 | 1,264,800.00 | 1,196,192.76 | 94.58 |
| 11 | விவசாய அமைச்சு | 118-2-20-3-2202 ஆடுகள் வளர்க்கும் செயற்திட்டம் | 7,948,080.00 | 7,948,080.00 | 7,887,632.82 | 99.24 |
| 12 | | 118-2-20-4-2202 உழுந்து, பயறு மற்றும் இஞ்சி செய்கை செயற்திட்டம் | 7,948,080.00 | 7,948,080.00 | 7,208,130.50 | 90.69 |
| 13 | | 118-2-23-1-1504 பசளை மானியம் 2022/2023 | 893,415,900.00 | 893,415,900.00 | 309,868,384.55 | 34.68 |
| 14 | | 118-2-23-7-2509 தேசிய உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் | 5,125,000.00 | 5,125,000.00 | 5,112,990.00 | 99.77 |
| 15 | சுற்றுலா மற்றும் காணி அமைச்சு | 122-2-3-5-2105 காணி சுவீகரிப்பதற்கான நஷ்டஈடு | 21,355,000.00 | 21,355,000.00 | 21,355,000.00 | 100.00 |
| 16 | கைத்தொழில் அமைச்சு – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு | 126-1-15-1-2205 சிறி ஞாணதிஸ்ஸ அறநெறி பாடசாலையின் அபிவிருத்தி விடயங்கள் | 475,013.00 | 475,013.00 | 475,013.00 | 100.00 |
| 17 | | 126-2-19-30-2509 விதாதா வள நிலையம் மறுசீரமைப்புச் செய்தல் | 2,672,090.00 | 2,672,090.00 | 2563715.93 | 95.94 |
| 18 | | 126-2-21-12-2001 தொழில் கல்வி மேம்பாடு மற்றும் தாபனங்களின் பௌதீக வள அபிவிருத்தி வேலைத்திட்டம் | 7,973,938.10 | 7,973,938.10 | 7,973,938.10 | 100.00 |
| 19 | | 126-2-5-2-2001 பிரிவெனா கல்வி தாபனங்களின் கட்டிட மறுசீரமைப்பு செய்தல் | 490,155.00 | 490,155.00 | - | 0.00 |
| 20 | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 130-1-13-1-2509 மும்மொழி வேலைத்திட்டம் | 370,000.00 | 370,000.00 | 370,000.00 | 100.00 |
| 21 | நீர் வழங்கல் அமைச்சு | 166-2-16-3-2506 கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை முன்னேற்றும் வேலைத்திட்டம் - (SACOSAN) | 3,000,000.00 | 3,000,000.00 | 3,000,000.00 | 100.00 |
| 22 | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | 171-2-6-7-2509 “திரிய மங்பெத“ வேலைத்திட்டம் | 1,055,699.00 | 1,055,699.00 | 1,055,699.00 | 100.00 |
| 23 | நீர்ப்பாசன அமைச்சு – நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு | 198-02-03-0-2001 RPM அலுவலகம் (கல்லோயா இடது கரை) மறுசீரமைப்புச் செய்தல் | 26,939.87 | 26,939.87 | 25,847.82 | 95.95 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24 | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | 228-1-1-0-2001 நீதிமன்றங்களில் சிறிய பழுதுபார்த்தல்கள் மற்றும் சிறிய நிர்மாணிப்புகள் | 4,891,830.45 | 4,891,830.45 | 4,815,901.75 | 98.45 |
| 25 | இலங்கை மதுவரி திணைக்களம் | 248-1-1-0-2001 சமையலறைக்கு Exhaust Fan / Exhaust Hood பொருத்துதல். (மதுவரி அலுவலகம்- அம்பாறை) | 133,621.00 | 133,621.00 | 105,660.00 | 79.07 |
| 26 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 290-01-01-0-1303 கல்முனை மாவட்ட செயலகத்தின் நீர் வழங்கலை பழுதுபார்த்தல் | 150,000.00 | 150,000.00 | 141,201.00 | 94.13 |
| 27 | காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 327-2-1-0-2507 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 612,380.00 | 612,380.00 | 593,582.50 | 96.93 |
| 28 | | 327-2-1-0-2509 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 201,615.00 | 201,615.00 | 190,260.00 | 94.37 |
| 29 | மனித வள மற்றும் தொழில் வாய்ப்பு திணைக்களம் | 328-2-1-2-2509 தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 102,400.00 | 102,400.00 | 54,930.00 | 53.64 |

## 3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

| ரூபா ,0000 | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஆதன குறியீடு** | **குறியீட்டு விபரம்** | **திகதிய 2021.12.31 சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி** | **2021.12.31 நிதி திகதிய நிலைமையின் படி அறிக்கை மீதி** | **எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது** | **அறிக்கையிடல் முன்னேற்றம் %** |
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 1,296,107,429.27 | 1,296,107,429.27 | - | 100% |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 662,662,296.49 | 662,662,296.49 | - | 100% |
| 9153 | காணி | 1,681,809,000.00 | 1,681,809,000.00 | - | 100% |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | - | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | |
| 9160 | நடைபெறும் பணிகள் | 77,561,485.64 | 77,561,485.64 | - | 100% |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | |
| | | | | | |

## 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**EPCG/AM/A/Dis.Sec/02/SR/02/2023/01** 2023 மே 26

**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர்,**
**மாவட்டச் செயலகம்**
**அம்பாறை**

**தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரமான விரிவான முகாமைத்துவ அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2023 மே 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டின் அறிக்கைக்கான தொடர்பு | செயற்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (இ( | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் சேவை இடைநிறுத்தப்பட்ட, இராஜினாமா செய்த, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரை நிலுவையாக இருந்த ரூபா 1,546,553 தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2.6 (அ( (ii) |

| | | |
|---|---|---|
| 1.6.1.(ஊ( | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 16 அரச விடுதிகளில் வசிப்பவர்களிடம் இருந்து ரூபா 355,782 வாடகை நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | 2.6 (அ( (i) |
| 3.1.1 | நிந்தவூர் பிரதேச செயலகத்தின் இரண்டு கிராமசேவை பிரிவுகளில் சௌபாக்யா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு ரூபா 600,000 பெறுமதியான 1800 கோழிக்குஞ்சுகள் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 24 சதவீதம் அதாவது ரூபா 282,000 பெறுமதியான 430 கோழிக் குஞ்சுகள் 03 மாதங்களுக்குள் உயிரிழந்துள்ளதால் பயனாளிகளுக்கு எதிர்பார்த்த நன்மைகள் கிடைத்திருக்க வில்லை. | 3.1.3(ஆ( |
| 3.2.(அ( | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று பழுதுபார்ப்பதற்காக 21 வருடங்களுக்கு மேலாக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடிவடைந்த பின்னரும் அதனை திருத்தவோ அல்லது மீளப் பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | 3.2. (அ( |
| 3.2.(இ( | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை 43 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாத காரணத்தினால் 03 வருடங்களுக்கு மேலாக களஞ்சிய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | 3.2. (ஆ( |
| 3.2. (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தெஹியத்தகண்டி, பதியத்தலாவ, மஹாஓயா, தமன, அட்டாளைச்சேனை மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுகளின் அமைந்துள்ள காணி பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.1 )v( 3.2 (உ( |
| 3.3 | அம்பாறை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியசாலை 2015 செப்டெம்பர் 21 ஆம் திகதி திருடர்களால் சேதப்படுத்தப்பட்டதுடன் இதனால் ஏற்பட்ட இழப்பு ரூபா 850,738 என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2022 மே 19 ஆம் திகதி வரையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 3.3 |
| 3.4.(அ( | கல்முனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களினால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி வழங்கியமை தொடர்பில் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையான 2,863,604 இனை அறவிடுவதற்கு கடந்த 03 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 3.5 )அ( |

| | | |
|---|---|---|
| 4 | 2021 ஆகஸ்ட் 22 ஆந் தேதியிட்ட 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, ஒவ்வொரு சேவை நிலையத்திலும் அதிகபட்சமாக 05 ஆண்டுகள் பணியாற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஏனைய சேவை நிலையங்களில் பணியாற்றுவதற்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் 51 உத்தியோகத்தர்கள் 06 முதல் 31 வருடங்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றி வருகின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட வேறு பணியிடங்களுக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 6.1 )ஈ( |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி அல்லாத சொத்துக்கள்

(i) முந்தைய ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியல்லாத சொத்துகள் அறிக்கையில் (SA82) உள்ளடக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துகளின் மீதி ரூபா 3,423,420,683 ஆக காணப்பட்ட போதிலும், மிளாய்வாண்டின் தொடக்கத்தில் அந்த மீதி ரூபா 3,418,509,244 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 4,911,439 வேறுபாடு காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் தொடக்கத் தேதியின்படி, நிதியல்லாத சொத்துகள் கணக்குப் பொழிப்பு அறிக்கையில் (SA80) இரண்டு சொத்து விடயங்கள் தொடர்பான மீதி ரூபா 1,884,053,167 ஆகக் காணப்பட்ட போதிலும், திரண்ட நிதியல்லாத சொத்துகள் அறிக்கையில் (SA82) அதே இரண்டு சொத்துக்கள் தொடர்பான மீதி ரூபா 1,879,141,727 ஆகும். அதன்படி, நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதிகள் இரண்டு அறிக்கைகளில் இரண்டு பெறுமதிகளாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) நிதிச் செயலாற்றல் கூற்றின் படி, மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துகளின் கையகப்படுத்தல் பெறுமதி ரூபா 27,942,223 ஆக இருந்த போதிலும், திறைசேரிக் குறிப்புகளின்படி (திரண்ட நிதியல்லாத சொத்துகள் கணக்கு அறிக்கை - SA82) அந்த மீதி ரூபா 26,208,493 ஆனமையால் ரூபா 1,733,730 வேறுபாடு காணப்பட்டது.

(iv) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் சரக்கு பொருட்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) தமன, அட்டாளச்சேனை, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான காணிகளும் பதியத்தலாவ மற்றும் தமன பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் அரச விடுதிகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(vi) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த, பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய உத்தியோகபூர்வ தங்குமிட கட்டிடங்களின் ரூபா 46,422,256 பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

---

மாவட்டச் செயலகத்தினால் கீழே காண்பிக்கப்பட்டுள்ள சில பதிவேடுகள் நாளதுவரையாகவும் முறையாகவும் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | சேதங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை |
| (ii) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரையாக பேணப்பட்டிருக்காமை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கிராம நல்லிணக்க (“கமசமக பிளிசந்தர”) செயற்திட்டத்தின் கீழ் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டங்களில் 658 செயற்திட்டங்களுக்காக திட்டமிட்டபடி வருடத்தில் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட ரூபா 112,295,000 நிதியை திறைசேரி விடுவிக்காமையால் அத்தொகை பயன்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 2.2 செலவின முகாமைத்துவம்

(அ) ஐந்து மீண்டுவரும் செலவினங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 10 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வரவு செலவுத் திட்ட ஆவணம் எதிர்கால செலவினங்களை துல்லியமாக கணித்து தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் கடந்த 04 வருடங்களைக் கருத்தில் கொண்டு நோக்குகையில், 270-1-0-2401 என்ற செலவின விடயத்தின் கீழ் 30 வீதத்திற்கும் அதிகமான பணம் சேமிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்வு ஆண்டின் மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது அது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுக் கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2022 டிசம்பர் 13 ஆந் தேதியிட்ட பொதுக் கணக்கு வழிகாட்டி இல. 2022/05 இன் படி, மொத்த நிகர ஒதுக்கீட்டிற்கும் ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழான உண்மையான செலவினத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் நிகர ஒதுக்கீட்டுத் தொகையில் 5 சதவீதம் அல்லது ரூபா 10,000 ஆகிய இரண்டு பெறுமதிகளில் ஏதேனும் ஒன்றுக்கு அதிகமாக இருந்தால், வேறுபாட்டை நியாயப்படுத்த தேவையான விடயங்கள் ACA-2(ii) படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 270-1-1-0-1404 செலவின விடயத்தின் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 515,786 நிதி ஒதுக்கீட்டை நியாயப்படுத்த தேவையான காரணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. .

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்

அம்பாறை மாநகர சபையினால் வெளியிடப்பட்டுள்ள 2023 பெப்ரவரி 02 ஆம் தேதியிட்ட AM/UC/ACC/1/1/46 ஆம் இலக்கம் கொண்ட கடிதத்தின்படி, அம்பாறை மாவட்ட செயலகத்தினால் அம்பாறை மாநகர சபைக்கு ரூபா 739,209 மதிப்பீட்டு வரியை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தியிருக்க வேண்டும். அப்படி இருந்தும் அம்பாறை மாவட்ட செயலகம் அதன் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் குறித்த அறிக்கையில் அந்த பெறுமதியை வெளிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், அந்த பெறுமதியை செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்பதுடன், சம்பந்தப்பட்ட செலவுத் தலைப்பின் கீழ் இந்தக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு போதுமான சேமிப்பு இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

## 2.4 ஏனைய அமைச்சகங்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்

### (அ) விவசாய அமைச்சு

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலுக்கு உகந்த உரக் கொள்கையின் கீழ், அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு 2022/23 பெரும் போகத்திற்காக சேதன உரங்களை வழங்குவதற்காக ரூபா 1,485,711,118 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அம்பாறை மாவட்ட செயலாளர் தலைமையிலான உர உபகுழுவின் தீர்மானத்திற்கு அமைய, அம்பாறை மாவட்ட தேசிய உர செயலகம் மற்றும் கமநல சேவைகள் மாவட்ட அலுவலகம் இணைந்து 2022 திசெம்பர் 31 ல் உள்ளவாறு 29 விவசாய சேவை நிலையங்களின் விவசாயிகளுக்கு ரூபா 893,415,900 செலவில் சேதன உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு மாதிரி பரிசோதனையின்படி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விவசாயிகளுக்கு வழங்கப்படாத ரூபா 8,577,405 மதிப்பிலான சேதனப்பசளைகள் மூன்று கமநல சேவை மையங்களின் களஞ்சியங்களிலும், மூன்று கமநல சேவை மையங்களிற்குரிய விவசாய அமைப்புகளின் களஞ்சியங்களிலும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. விவசாயிகளுடனான நேர்காணலின் போது விவசாயிகள் தெரிவித்த வாக்குமூலத்தின் படி, விவசாயிகள் இந்த உரத்தை பயன்படுத்துவதை விரும்பாததுடன் சரியான காலத்திற்குள் உரத்தைப் பெறமுடியாது போயிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்ட உரம் தேவையான தரத்தில் இல்லாமையாலும் இவ்வாறு உரம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2022/23 ரெும் போகத்திற்காக விவசாய அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் நட்பு உரங்களின் விநியோக - வழிகாட்டுதலின் பிரிவு 3.8 இன் படி, விவசாய அமைச்சின் விசேட அங்கீகாரத்தின் கீழ், 2022 சிறுபோகத்தில் எஞ்சியிருந்த சேதன உரங்களை 2022/23 பெரும் போகத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க முடியுமாயிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் சிறு போகத்தின் போது 02 கமநல சேவை மையங்களின் களஞ்சியங்களில் அவ்வாறு எஞ்சியிருந்த ரூபா 68,686,000 பெறுமதியான சேதன உரங்களின் இருப்பு 2022/23 பெரும் போகத்தில் விநியோகிக்கப்படாமையால் 2022/23 பெரும் போகத்தில் சேமிக்கப்பட முடியுமாயிருந்த ரூபா 68,686,000 அரசாங்க நிதியை சேமிக்கும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு**

பெண்கள், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை மகளிர் பணியகத்தினால் குறைந்த வருமானம் பெறும் விதவைகள் மற்றும் வீட்டைத் தலைமை தாங்கும் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2010 முதல் 2022 வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட 05 கடன் திட்டங்கள் சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,208,212 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) கிரமியப் பொருளாதார பயிர்களை பயிரிடுதல் மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சகத்திடமிருந்து பெறுவனவுகள்**

(i) கிராமிய பொருளாதார பயிர்களை பயிரிடுதல் மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கீழ், அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஊடாக பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டமானது இரண்டு கட்டங்களின் கீழ் ரூபா 6,197,323 செலவில் நடைமுறைப்படுத்தப்படடிருந்தது. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின்படி, முதல் கட்டத்தின் கீழ் ரூபா 194,000 பெறுமதியான 09 ஆடுகளும், இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 215,115 மதிப்பிலான 09 ஆடுகளுமாக வழங்கப்பட்ட ரூபா 409,115 மதிப்புள்ள ஆடுகள் இறந்திருந்தன. இறந்த ஆடுகள் சரியான எடையில் இல்லாதிருந்தமையாலும், உரிய சுற்றறிக்கையின்படி ஆடு வளர்ப்பதற்கான பயிற்சி பயனாளிகளுக்கு வழங்கப்படாமையாலும், பிரதேச செயலகம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் மட்டத்திலான இத்திட்டத்தின் பலவீனமான கண்காணிப்பு காரணமாகவும் இவ்வாறு ஆடுகள் இறந்திருந்தன. ஆடுகளுக்கு காப்பீடு செய்யப்படாத காரணத்தால் ஆடுகளுக்கு வேறு மாற்றுப் பலன்கள் எதுவும் உரிய பயனாளிகள் பெற்றுக் கொள்ளாததால், திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) கிராமிய பொருளாதார பயிர்களை பயிரிடுதல் மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய பொருளாதார பயிர்கள் திட்டத்தின் உளுந்து/பயறு பயிர்கள் பயிரிடுதல் திட்டம் (BG - Black Gram/GG - Green Gram - 2022) தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1073 பயனாளிகளுக்கு ரூபா 6,195,575 பெறுமதியான 5926.5 கிலோ பயறு விதைகள் விநியோகிக்கப்பட்டது. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்படி, இந்த பயற்று விதைகள் 2022 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கின்ற மூன்றாம் காலாண்டில் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டாலும், உரிய விதைகள் விவசாயிகள் எதிர்பார்த்த காலத்திற்குள் வழங்கப்படாது 2022 டிசம்பரிலேயே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதால், இத்திட்டம் பயனளிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்**

சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் இரண்டு இலட்சம் (200,000) சமூர்த்தி குடும்பங்களை மையமாகக் கொண்ட முழுமையான வசதிகளுடன் கூடிய வீட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிற்கான சமூர்த்தி பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும் திட்டத்திற்காக ரூபா 1,840,680 செலவிடப்பட்டிருந்தது. இதன்படி, கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி மற்றும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மாவட்டச் செயலகத்திற்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டு 03 மாத காலப்பகுதிக்குள் ரூபா 822,420 பெறுமதியான 942 கோழிக் குஞ்சுகள் உயிரிழந்திருந்தன. கணக்காய்வு திகதியில் கூட அந்த இறந்த குஞ்சுகளுக்குப் பதிலாக வேறு குஞ்சுகள் வழங்கப்படாததன் காரணமாக திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 822,420 க்கான நன்மைகள் உரிய சமூர்த்தி பயனாளிகளுக்கு கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வேண்டிய சான்றுறுதி

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்ற காலத்தினுள் அனைத்துக் கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதிலளிக்கப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், இந்த அறிக்கையின் 3.6 ஆம் பந்தியிலுள்ள கணக்காய்வு அவதானிப்புகளிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகள் கோவை | | |
| (i) XIX அத்தியாயத்தின் 5 மற்றும் 5.1 ஆம் பிரிவுகள் | 437,475 | மாவட்ட செயலகத்திற்குட்பட்ட 06 அரச வீடுகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களிடம் இருந்து வாடகை நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 1,687,952 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் சேவை இடைநிறுத்தப் பட்ட, இராஜினாமா செய்த, மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற 14 உத்தியோகத்தர் களிடம் இருந்து 03 மாதங்கள் முதல் 03 வருடங்கள் வரை நிலுவையாக இருந்த தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 138 | 38,891 | பதியத்தலாவ பிரதேச செயலகத்தால் வவுச்சர் இலக்கம் 2 தொடர்பில் பணம் செலுத்தியிருந்த போதிலும் அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் சான்றுறுதிப்பட் டிருக்கவில்லை. |
| (இ) நிதி அமைச்சின் 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய MF/NPD 02/2021 ஆம் இல க்க சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவு | 142,872 | கிராம நல்லிணக்கத் (“கமசமக பிளிசறு”) திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உண்மையில் செலவிடப்பட்ட மொத்த திட்டப் பெறுமதியில் 2 வீதத்தை பிரதேச செயலகத்திற்கு நிர்வாகச் செலவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும், கிராம நல்லிணக்கம் தொடர்பாக மஹாஓயா மற்றும் பதியத்தலாவ பிரதேச செயலகங்கள் வரம்பிற்கு மேல் நிர்வாகச் செலவுகளைச் செலுத்தியுள்ளன. |

| | | |
|---|---|---|
| (ஈ) நிதி, பொருளாதார ஸ்தீரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைவகுத்தல் அமைச்சின் 01/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அனைத்துக் கட்டிடங்களைப் பற்றிய தகவல்கள் 2023 மார்ச் 15 க்குள் தலைமைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண் டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிரு க்கவில்லை. |
| (உ) நிதி, பொருளாதார ஸ்தீரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைவகுத்தல் அமைச்சின் 02/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை | | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும் பற்றிய தகவல்கள் 2023 மார்ச் 15 க்குள் தலைமைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண் டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.iv ஆம் பிரிவு | 5,191,174 | வழக்கமான வேலை நேரத்தின் பின்னர் வழங்கப்படும் கொடுப்பனவுகளான மேலதிக நேரம் மற்றும் விடுமுறை ஊதியம் போன்றவற்றுக்கு நேரத்தை அடிப்படையாகக் கொண்டால், கைரேகை இயந்திரத்தின் மூலம் நேரத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயினும், மஹாஓயா, அம்பாறை மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்கள் 2022 ஆம் ஆண்டிற்கு அத்தகைய கைரேகை இயந்திரத்தை பயன்படுத்தாது 141 அதிகாரிகளுக்கு விடுமுறை கொடுப்பனவுகளை செலுத்தியிருந்தன. |

**2.7 வைப்புக்கள்**

02 வருடங்களுக்கு மேலாக வைப்பிலிடப்பட்டுள்ள ரூபா 11,944,076 பெறுமதியான 02 வகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 வங்கி கணக்குகளின் செயல்பாடுகள்**

கல்முனை பிரதேச செயலகத்தினால் பராமரிக்கப்படும் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்பிலிடப்பட்ட ரூபா 256,855 தொகையானது வங்கிக் கூற்றில் ஓராண்டுக்கு மேலாக இனங்காணப்படாத வைப்புத் தொகையாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், அதனை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

2020 ஆகஸ்ட் 28 ஆந் தேதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

### 3.1.2 எதிர்பார்த்த பெபேற்று மட்டங்கள் அடையப் பெற்றிருக்கமை

(அ) பதியத்தலாவ பிரதேச செயலகத்தினால் கிராமிய நல்லிணக்க வேலைத்திட்டம் - 2022 இன் கீழ் ஹெலகொமன கோரமடையலந்த வீதி, சுமனசர பாடசாலை வீதி மற்றும் புக்குவெல்ல கபுதெனியகல வீதி ஆகிய 3 வீதிகளை கொங்கிரீட் செய்வதற்காக மொத்தமாக ரூபா 1,747,571 செலவிடப்பட்டிருந்தது. அந்த 3 வீதிகளையும் கான்கிரீட் செய்வதுடன் தொடர்புடைய மதிப்பீட்டின் 07வது உருப்படியின் படி வீதிகளின் மேற்பரப்பில் தார் இடப்பட வேண்டும் என்றாலும், ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட சமூக அமைப்பினால் பணிகளை நிறைவேற்றாததால், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 65,520 தொகை வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 31 வரையிலும் குறித்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் பதியத்தலாவ பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட சுபீட்ச கிராமிய வேலைத்திட்டத்தின் கீழ் 05 வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 184,293 பெறுமதியான தொகை அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக, வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 31 வரையிலும் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome) கிடைக்காமை

(அ) நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் கிராம நல்லிணக்க வேலைத்திட்டம் - 2022 இன் கீழ் பயனாளிகளுக்கு ரூபா 3,418,820 பெறுமதியான 300 ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் ரூபா 1,142,295 பெறுமதியான 33 ஆடுகள் உயிரிழந்திருந்தன. இறந்த ஆடுகளுக்கு வேறு எந்தப் பலனும் பயனாளிகளுக்குத் திரும்பக் கிடைக்காத காரணத்தால் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிந்தவூர் பிராந்திய செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது இரண்டு கிராமசேவகர் பிரிவுகளில் சௌபாக்ய திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு ரூபா 600,000 பெறுமதியான 1800 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 24 வீதம் அதாவது ரூபா 282,000 பெறுமதியான 430 கோழிக் குஞ்சுகள் 03 மாதங்களுக்குள் உயிரிழந்தமையால் எதிர்பார்த்த பலன்கள் பயனாளிகளுக்கு கிடைத்திருக்கவில்லை.

### 3.1.4 செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்

(அ) கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் 2016 (RIDP) இன் கீழ், மொரதெனிய கிராம உத்தியோகத்தர் பிரதேசத்தில் நீர் திட்டத்திற்காக குழாய் கிணறு ஒன்றை அமைப்பதற்காக பதியத்தலாவ பிரதேச செயலகம் ரூபா 1,000,000 ஒதுக்கியிருந்தது. இதன்படி 2016 ஆம் ஆண்டு இத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 944,233 செலுத்தப்பட்டது. எனினும், இந்தத் திட்டம் தோல்வியடைந்ததால், 2021 அக்டோபர் 31 அன்று, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செலுத்திய தொகையிலிருந்து அதற்கு ஏற்பட்ட செலவைக் கழித்த பின்னர் ரூபா 510,250 தொகை பிரதேச செயலகத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்ததுடன், பிரதேச

செயலகத்தால் அத்தொகை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இத்திட்டத்திற்கு 07 வருட கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னர் இச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தமையால், இப்பணிக்காக செலவிடப்பட்ட ரூபா 433,983 தொகை பயனற்ற செலவாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிழக்கு மாகாண விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை உற்பத்தி மற்றும் மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட நிலையான பாரம்பரிய கரிம உர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2021 ஆம் ஆண்டில் பாரிய அளவிலான கரிம உரங்களை உற்பத்தி செய்வதற்காக தமன மற்றும் உஹன பிரதேச செயலகங்களிலுள்ள மூன்று பயனாளிகளுக்கு ரூபா 1,500,000 ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 31 ஆம் திகதி வரை திட்டம் அமுல்படுத்தப்படாமையால் ஒதுக்கீட்டுத் தொகை வைப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 3.1.5 செயற்திட்டங்களை பூரணப்படுத்துவதில் தாமதங்கள்

(அ) நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2021 டிசம்பர் 15 ஆம் தேதியிட்ட MF/NPD 02/2021 ஆம் இலக்க "கமசமக பிளிசந்தர" – 2022 சுற்றறிக்கையின் 3.3 வது பிரிவின்படி அனைத்துச் செயற்திட்ட பிரேரணைகளும் ஆண்டின் போது பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பதியத்தலாவ பிரதேச செயலகத்தின் கீழ் 42 செயற்திட்டங்களிற்காக 190 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ரூபா 6,5358 மதிப்புள்ள பொருட்கள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படாது 2023 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை பிரதேச செயலகத்தில் சேமிக்கப்பட்டிருந்ததுடன், தமன பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட ரூபா 270,000 மதிப்புள்ள இரண்டு திட்டங்கள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு SACOSAN சுத்திகரிப்புச் செயற்திட்டத்தின் மூன்றாவது கொடுப்பனவுக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக பதியத்தலாவ பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 140,000 தொகையானது பயனாளிகள் உரிய பணிகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 04 வரை, இச்செயற்திட்டம் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று பழுதுபார்ப்பதற்காக 21 வருடங்களுக்கு மேலாக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடிவடைந்த பின்னரும் அதனை திருத்தவோ அல்லது மீளப் பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு மே மாதம் வரை 28 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாத காரணத்தினால் 03 வருடங்களுக்கு மேலாக களஞ்சிய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) சமூக சேவைகள் திணைக்களத்தினால் மஹாஓயா பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட இலக்கம் 43-3136 என்ற நீர் பவுசர் 2013 ஆம் ஆண்டு முதல் 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் 10 வருடங்களாக பிரதேச செயலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதைத் திருத்திப் பயன்படுத்தவோ அல்லது அப்புறப்படுத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(ஈ) மஹாஓயா பிரதேச செயலக எல்லைக்குள் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் தன்னார்வ தொண்டு நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட இரண்டு கச்சிதமான இலை துருவல் இயந்திரம், உழவு இயந்திரம் மற்றும் உழவு இயந்தப் பெட்டி ஆகியன 2012 ஆம் ஆண்டு மேற்படி தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு இடையில் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக மஹாஓயா பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டது. இருப்பினும் 2023 பெப்ரவரி 17 வரையிலும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததுடன் தொடர்புடைய வாகனங்கள் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன.

(உ) தெஹியத்தகண்டி, பதியத்தலாவ மற்றும் மஹாஓயா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குச் சொந்தமான காணிகளின் உரித்து 2022 டிசம்பர் 31 வரை சுவீகரிக்கப்படாததுடன் அதன் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவுமில்லை.

### 3.3 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்

அம்பாறை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியசாலை 2015 செப்டெம்பர் 21 ஆம் திகதி திருடர்களால் சேதப்படுத்தப்பட்டதுடன் இதனால் ஏற்பட்ட இழப்பு ரூபா 850,738 என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2023 மே 09 ஆம் திகதி வரையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்படாமை

எமது கிளையினால் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதியிட்டு வழங்கப்பட்ட AMP/A/Dist.Sec/2022/04 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்கு மாவட்டச் செயலகத்தினால் 2023 மே 09 ஆந் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) கல்முனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களினால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் காணி வழங்கியமை தொடர்பில் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையான 2,863,604 இனை அறவிடுவதற்கு கடந்த 04 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாஓயா பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட குளாம் வாகனமான இலக்கம் EPPA 7025 உடைய கெப் வாகனம் 2020 ஆகஸ்ட் 14 அன்று விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்து காரணமாக காரைப் பழுதுபார்ப்பதற்கு ஏற்பட்ட செலவு ரூபா 1,286,062 ஆனதுடன் காப்பீட்டு நிறுவனம் செலுத்திய தொகை ரூபா 552,543 ஆகும். நிதிப்பிரமாணம் 104 (4) இன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையின்படி, காப்பீட்டு நிறுவனம் ஈடுசெய்யாத இழப்பை வாகனத்தின் சாரதியிடம் வசூலிக்க பரிந்துரைத்தாலும், காப்பீட்டு நிறுவனம் இழப்பீடாகச் செலுத்தாது பழுதுபார்ப்பதற்காகச் செய்த ரூபா 773,517 தொகையினை அறவிடுவதற்கு அம்பாறை மாவட்ட செயலகத்தினால் முடியாதிருந்ததுடன் அத்தொகையைச் செலுத்தி 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி வாகனம் கராஜில் இருந்து மீட்கப்பட்ட போதிலும், 2023 மே 1 ஆம் திகதி கூட ஏற்பட்ட நட்டத்தை சாரதியிடம் இருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணல்

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் படி அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான தயார்நிலையை பரிசோதித்ததில், மாவட்ட செயலகம் 2022 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 குறித்து மாவட்டச் செயலகத்தினால் சரியான கவனம் செலுத்தியிருக்கவில்லை. வருடத்தில் பெறப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில், 08 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டதுடன், நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் படி, 09 நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை வழங்குதல்

பொது நிர்வாக மறட்றும் முகாமைத்துவ அமைச்சின் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிரசைகள்/வாடிக்கையாளர் சாசனத்தை அம்பாறை மாவட்ட செயலகம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும், செயலகத்தால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6 மனித வள முகாமைத்துவம்

### 6.6 இணைக்கப்பட்ட பதவியணியும் உண்மையான பதவியணியும்

(அ) 2022 டிசம்பர் 31 நிலவரப்படி, அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 2363 ஆகவும், உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை 2721 ஆகவும் காணப்பட்டதுடன் பதவியணியிலுள்ள 116 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 474 மேலதிக பதவியணியை உரியவாறு அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நிர்வாகச் செயலாளரின் இலக்கம் 02/2018 கொண்ட 2018 ஜனவரி 24 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை. மேலும், அனைத்து ஊழியர்களுக்கும் மேற்கண்ட சுற்றறிக்கையின்படி வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை.

(இ) 2017 செப்டம்பர் 20 ஆம் தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 4/2017 இன் படி பணியாளர்கள் ஆட்சேர்ப்பு, இராஜினாமா, சேவையை விட்டு வெளியேறுதல், பணிநீக்கம், ஓய்வு மற்றும் இறப்பு ஆகியவற்றின் காரணமாக ஏற்படுகின்ற ஊழியர் அசைவுகளை ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்த ஒரு மாதத்திற்குள் நாளதுவரைப்படுத்தி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் 4வது காலாண்டில் அவ்வாறு செய்யப்படவில்லை.

(ஈ) 2021 ஆகஸ்ட் 22 ஆந் தேதியிட்ட 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, ஒவ்வொரு சேவை நிலையத்திலும் அதிகபட்சமாக 05 ஆண்டுகள் பணியாற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஏனைய சேவை நிலையங்களில் பணியாற்றுவதற்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் 27 உத்தியோகத்தர்கள் 06 முதல் 12 வருடங்கள் ஒரே பணியிடத்தில் பணியாற்றி வருகின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட வேறு பணியிடங்களுக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**ஓப்பம்: எம்.பி.ஐ.எம். ரஷ்மி**
**சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக**

**அத்தியாயம் 04**

**04. செயற்திறன் குறிகாட்டிகள்**

**4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்)**

| குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் உண்மையான வெளியீட்டு விகிதாசாரம் **(%)** | | | |
|---|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** | **0% - 49%** |
| வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | | | | 21.60 |
| நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலனோம்புசெயற்பாடுகள். | | | | 29.37 |
| வழங்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திகள் | | | | 14.62 |
| வழங்கப்பட்ட சுற்றாடல் துறை அபிவிருத்திகள். | | | | 13.98 |

## அத்தியாயம் 05

## 05. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்

### 5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடவும்

| இலக்குகுறிக்கோள்/ | அடைவுகள் | அடைவுகளது குறிகாட்டிகள் | இற்றைவரை அடைவுகளது முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| எல்லா இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல் | பல்வேறு மூலங்களில் இருந்து வளங்களை குறிப்பிடத்தக்க அளவில் திரட்டுவதை உறுதி செய்தல் | i. கிராமப்புற உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 737 எண்ணிக்கையிலான வாழ்வாதார மேம்பாட்டு ஆதரவு திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. | **14.62** | | |
| பசியை ஒழிக்கவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை அதிகரித்தல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல். | 2030 ஆம் ஆண்டளவில், மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்தி மற்றும் வருமானத்தை இரட்டிப்பாக்கல். | i. அம்பாறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 473.15 ஏக்கர் பரப்பளவில் பாசிப்பயறு செய்கை.<br>ii. 119.5 ஏக்கரில் உளுந்து பயிர்ச்செய்கை.<br>iii. வரம்புக்கட்டு விவசாயத்திற்கு பயன்படுத்த 25,000 நெல் விவசாயிகளுக்கு 25,000 காய்கறி விதை பொதிகள் விநியோகிக்கப்பட்டன.<br>iv. கிராமிய வீதிகள், சிறு நீர்ப்பாசனம், நீர் வழங்கல், விவசாயக் கிணறு போன்ற சுமார் 92 விவசாய அபிவிருத்தி திட்டங்கள் முடிக்கப்பட்டன.<br>v. 20பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அங்கர் பால் பாக்கெட்டுகள்4 , 212இனை பசுமை விவசாய செயல்பாட்டு நிறுவனம் மற்றும் ஃபோன்டெரா பிராண்ட்ஸ் லங்கா ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அன்பளிப்பு 2106 .செய்யப்பட்டது<br>vi. உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் 10206 பயனாளிகளுக்கு506.35Mt அரிசி, 202.54Mt பருப்பு மற்றும் 45.57Mt of எண்ணெய் அன்பளிப்பு செய்யப்பட்டது. | | | **100** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | vii. முன்பள்ளி குழந்தை பருவ நிலையங்களில் உள்ள குழந்தைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 2022 செப்டம்பர், அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு போசாக்கான காலை உணவு வழங்கப்பட்டதுஇலக்கு . வைக்கப்பட்ட பயனாளிகள் சுமார்5,031 குழந்தைகள் மற்றும் இத்திட்டத்திற்கான மொத்த செலவு மில்லியன்.ரூபா 32.93ஆகும். | | | |
| ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்து, எல்லா வயதினருக்கும் நல்வாழ்வை மேம்படுத்துதல் | 2030 ஆம் ஆண்டளவில், தடுப்பு மற்றும் சிகிச்சையின் மூலம் தொற்று அல்லாத நோய்களால் ஏற்படும் முன்கூட்டிய இறப்பை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்து, மனநலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல். | 4 .பொது விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தல், விளையாட்டு வசதி வழங்கல் மற்றும் நடைபாதை தடங்கள் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்கள் வலுவான சுகாதார நிலைமைகளுடன் நோயற்ற வாழ்க்கையை உருவாக்குவதற்காக திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. | | | **100** |
| | 2030க்குள், அனைவரும் சமமான சுகாதாரம் மற்றும் சுகாதாரத்தை அடையதல். | மக்களின் சுகாதார தேவையினை உறுதி செய்வதற்காக பொது கழிப்பிடங்களை புதுப்பித்தல் கட்டுமானங்களுக்காக .திட்டங்கள் உள்ளடக்குதல் 5 | | | **100** |
| உறுதியான உள்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல் | பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பிராந்திய உள்கட்டமைப்பு உட்பட தரம், நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்ச்சியான உள்கட்டமைப்பை உருவாக்குதல் | கொங்கிரீட் வீதிகள், கிரவல் வீதிகள் ,பாலங்கள், கல்வெட்டுகள் மற்றும் கிராமப்புற வீதிகளுடன் தேவையான பக்க வடிகான்கள் ஆகியவை நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் புதுமைகளை வளர்ப்பதற்காக அபிவிருத்தி செய்யப்பட்டன. | **22** | | |
| | உள்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வசதி திட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய தொழில்மயமாக்கலை ஊக்குவிக்க செயல்படுத்தப்பட்டன . | தொழில்மயமாக்கலை ஊக்குவிக்க உள்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வசதி திட்டங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தல். | **25** | | |
| | சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு சந்தைகளுக்கான அணுகலை அதிகரித்தல். | | | | |

## 5.2 நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல்

நிலையான அபிவிருத்தி இலக்குகளின் இலக்குகளை அடையும் போது பின்வரும் சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

1. பொருளாதார மந்தநிலை மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை காரணமாக, திட்டமிடப்பட்ட பெரும்பாலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேவையான நிதி வசதிகளைப் பெறுவது கடினமாக இருந்தது.
2. விலைவாசி உயர்வு மற்றும் பல முக்கிய பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக ஒப்பந்ததாரர்கள் முதலில் ஒப்புக்கொண்டதை விட அதிக கட்டணம் கேட்பதால், சுகாதார திட்டங்கள் உட்பட பல உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலாமல் போனது.
3. சில முக்கியமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பெறுவதில் உள்ள சிரமங்கள்.
4. எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை மற்றும் தட்டுப்பாட்டுடன் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளை நடத்துதல்.
5. வழங்குனர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துவதற்கு போதுமான அளவு கட்டுநிதி இன்மை மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களுடன் தொடர்புடைய சில பொருட்கள் சந்தையில் இல்லாத காரணத்தினால் சில வாழ்வாதாரத் திட்டங்கள் முதலாம் காலாண்டில் பூர்த்தி செய்யப்படவில்லை.
6. நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக, மாவட்டத்தில் உள்ள மக்களது வருமானம் குறைவடைதல் மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய சத்தான உணவு கிடைப்பதிலுள்ள சிரமம் போன்ற பல சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் எதிர்பார்த்த இலக்குகளை சிறந்த முறையில் அடைய செயலகத்திற்கு இயலுமாக இருந்தது.

## அத்தியாயம் *06*
## 06. மனித வள விபரம்

### 06.1 பதவியணி முகாமைத்துவம்

| # | அங்கிகரிக்கப்பட்ட ஆளணியினர் | தற்போதுள்ள ஆளணியினர் | வெற்றிடம் | (மேலதிகம்) | |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 97 | 81 | 16 | - | |
| மூன்றாம் நிலை | 77 | 33 | 44 | - | |
| இரண்டாம் நிலை | 1933 | 2407 | - | (474) | |
| ஆரம்ப நிலை | 256 | 200 | 56 | - | |
| **மொத்தம்** | **2363** | **2721** | **116** | **(474)** | |

### 06.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள பயிற்சியாளர்கள் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களின் கடமைகளை மோற்கொள்வதன் ஊடாக நிறுவனத்தின் செயல்திறணை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

06.3 ***மனித வள அபிவிருத்தி***

| **தொடர் இல** | **வேலைத்திட்டத்தின் பெயர்** | **பயிற்சி அளிக்கப்பட்ட ஆளணியினர்** | **வேலைத்திட்ட கால எல்லை** | **முழு முதலீடு (Rs'000)** | | **வேலைத்திட்டத்தின் தன்மை (**உள்நாட்டு / வெளிநாட்டு**)** | **வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு*** |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| 1. | மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கிற்கான மதிப்பீடு (சிங்கள மொழி மூலம்) | 100 | 2022.10.22 | 83350.00 | 00 | உள்நாட்டு | நன்று |
| 2. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி (சிங்கள உத்தியோகத்தர்களுக்கு) | 40 | 2022.03.09<br>2022.03.11 | 49195.00 | 00 | உள்நாட்டு | நன்று |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி (தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு) | 40 | 2022.03.23<br>2022.03.25 | 50520.00 | 00 | உள்நாட்டு | நன்று |
| 4. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி (தமிழ் மொழிமூல உத்தியோகத்தர்களுக்கு) | 40 | 2022.03.28<br>2022.03.30 | 53490.00 | 00 | உள்நாட்டு | நன்று |
| 5. | அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்தி | 30 | 2022.06.29 | 36140.00 | 00 | உள்நாட்டு | நன்று |
| 6. | சாரதிகளின் கடமை பொறுப்புக்கள் தொடர்பாக ஒரு நாள் பயிற்சி (சிங்கள மொழி மூலம்) | 13 | 2022.06.22 | 25992.00 | 00 | உள்நாட்டு | மிக நன்று |
| 7. | சாரதிகளின் கடமை பொறுப்புக்கள் தொடர்பாக ஒரு நாள் பயிற்சி (தமிழ் மொழி மூலம்) | 17 | 2022.06.23 | 30952.00 | 00 | உள்நாட்டு | மிக நன்று |
| 8. | புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இயலளவு விருத்தி மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு (தமிழ் மொழி மூலம்) | 40 | 2022.02. 22 | 58100.00 | 00 | உள்நாட்டு | மிக நன்று |
| 9. | புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குஇயலளவு விருத்தி மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கு (சிங்கள மொழி மூலம்) | 40 | 2022.03.15 | 58100.00 | 00 | உள்நாட்டு | மிக நன்று |

## 07. அத்தியாயம்
## 07– இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | ஏனையவை | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு /தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமில்லை | நாளது வரைவு படுத்தப்படவில்லை | நாளது வரைவு படுத்தப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமி ல்லை | | தொடர்ச்சியாக தயாரித்து நடாத்திக் கொண்டு செல்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 6 | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134 (2) டி.எம்.ஏ /1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமில்லை | உரிய செயற்பாட்டினை பூரணப்படுத்துவதற்கு நீண்ட காலம் எடுக்கும் | அகற்றுவதற்கான பணிகளை உடனடியாக முடிக்குமாறு அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமில்லை | இருக்கும் நிதி நிலமையின் நிமித்தம் பரிசீலிப்பினை மேற்கொள்வதற்கு கடினமாக உள்ளது | உரிய பரிசீலனை உடனடியாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை வழங்கப்பட்டுள்ளது |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமில்லை | | கடன் நிலுவையினை சீர் செய்வதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் /குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமில்லை | | உடனடியாக தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமில்லை | | தயாரிக்கபட்டுக் கொண்டிக்கின்றது |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | *இணக்கமில்லை* | | *எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்* |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |

***முற்றும்***